அருளோசை

திருவள்ளுவர் ஆண்டு 2004
ஐப்பசி
1973 அக்டோபர்

சமய பாட போதனைத் திங்களிதழ்

மாநில மாநாட்டுச் சிறப்பு மலர்

குருந்தமலைப் பிள்ளைத்தமிழ்

—:×:—

வெம்மை மிகத் தேவரைச் சிறைசெய்
வீர தீர சூரனை முன்
வீட்டி இமையோர் களிக்க இசை
வெற்றிமுரசம் தனைப்போன்றும்
அம்மை தெய்வ குஞ்சரிதன்
அணியார் திருக்கல் யாண விழா
அனைவோர் களுங்கண் டுய்மின் என
அழைக்கும் மண முரசம் போன்றும்
இம்மை மறுமைப் பயன் மணங்கண்டு
இசைந்தோர்க் கெல்லாம் வழங்குதுமென்
றியம்பி அருளி விடையளித்த
இன்பக் கொடை முரசம் போன்றும்
மும்மைப் பயனும் யாம்பொருந்த
முழக்கியருளாய் சிறுபறையே!
முருகா குருந்தாசலத் திறைவா!
முழக்கியருளாய் சிறுபறையே!

—தவத்திரு. கந்தசாமி சுவாமிகள்






தெய்வயானை திருக்கல்யாணம்

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-600018

பேரவை மாநில மாநாடு



மாநிலக்குழுக் கூட்டத்தில்
மகாசந்நிதானங்கள்
எழுந்தருளியிருத்தல்



திவ்வியப் பிரபந்த மாநாடு

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	பிரமாதீச ஐப்பசி 1973 அக்டோபர்	ஓசை 4

அருளோசை அன்பர்களுக்கு வணக்கம்

இந்த இதழ் சற்றுக் காலதாமதமாகவே கிடைக்கிறது. அன்பர்கள் பொறுத்தாற்றிக் கொள்ள வேண்டுகிறோம்.

சென்ற அக்டோபர் 6, 7, தேதிகளில் பேரவை மாநில மாநாடு திருச்சிராப்பள்ளியில் சிறப்புற நடைபெற்ற செய்தியினைத் தாங்கள் பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருக்கலாம்.

பேரவை ஊழியர்கள் அனைவரும் மாநாடு தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். பேரவை அச்சகமும் அப்பணிகளிலேயே ஈடுபட்டிருந்தது. எனவே "அருளோசை" அச்சிடத் தாமதமாயிற்று. ஏன்? அக்டோபர் 10-ஆம் தேதிக்குப் பின்னர்தான் அருளோசை வேலை தொடங்கப் பெற்றது.

எப்படியும் தீபாவளிக்குள் இதழை அன்பர்களுக்கு அனுப்பிவிட முடிவு செய்து துரிதமாக வேலை செய்தோம். பேரவையின் தலைவர் அவர்கள், இவ்விதழை மாநாடு பற்றிய செய்தியுடன் மாநாட்டுச் சிறப்பிதழாக, வெளியிட வேண்டும் என்று திருவுளம் கொண்டார்கள். மாநாட்டுச் சிறப்பு மலர் என்றால் புகைப்படங்கள் வேண்டாமா? அதைப் பெற்றுப்

படஅச்சு (பிளாக்) செய்வதில் சிறிது தாமதமாயிற்று. பின்னர் சிறப்பு மலர் கூடுதலான பக்கங்களுடன் வெளிவர வேண்டுமே! மேலும் சிறிது தாமதமாயிற்று.

இப்படிப் பல காரணங்களால் தீபாவளிக்குள் இதழை அனுப்ப இயலவில்லை. அடுத்த இதழ் உரிய காலத்தில் வெளிவரும்.

இந்தச் சிறப்பு மலர் பற்றிய அன்பர்களின் கருத்துக்களை வரவேற்கிறோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

"அருளோசை"

—:o:—

வினா விடைப் பகுதி—ஆண்டுப்பரிசு

முதல் பரிசு: திரு. வே. தட்சிணாமூர்த்தி, மஞ்சக்கண்ணி, தஞ்சை மாவட்டம். சந்தா எண். 330.

இரண்டாம் பரிசு: திரு. மு. வேங்கடேசன், சூளை, சென்னை-7. சந்தா எண். 617.

மூன்றாம் பரிசு: திரு. சோ. கிருஷ்ணமூர்த்தி, எம்.எ., திருச்சிராப்பள்ளி-2. சந்தா எண். 1025.

சிறப்பாகப் பணியாற்றிய பேரவைச் சமயப்பரப்புநர்கள்

முதல் தகுதி: திரு. தே. ம. பூதலிங்கம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, மாவட்டம்.

இரண்டாந்தகுதி: திரு. செ. சுப்பிரமணியம், பெரியகுளம் மதுரை மாவட்டம்.

மூன்றாந்தகுதி: திரு. அ. நடராசன், தர்மபுரி&சேலம் மாவட்டங்கள்.

மேற்கண்ட அறுவருக்கும் பேரவை மாநில மாநாட்டில் பரிசுகள் வழங்கப்பெற்றன.

இந்த இதழில்



பேரவை மாநில மாநாடு

கவிஞர் பழ. தரும. ஆறுமுகம்

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நம் பேரவை "மாநில மாநாடு" வெற்றிப் பொலிவோடு நிறைவெய்தியிருக்கிறது. சமய உலகத்தைத் தட்டி யெழுப்பித் துடிப்போடும், துணிவோடும் செயல்படத் தூண்டும் தூண்டுகோலாய் மாநாடு அமைந்திருந்தது. சமயச் சிறப்புமிக்க பேரூர்களிலெல்லாம், பழமையும் பெருமையும் தனித்தன்மையும் வாய்ந்த நமது சமயநெறிக்குப் புறம்பான பல செயல்களை நிகழ்த்திய நாத்திக வழிகளின் போக்கை மறுக்கும் வகையில் மாநாடு அமைந்திருந்தது.

"சமய உலகத்தில் இப்படி ஓர் எழுச்சியா ?" என்று அத்தகையோர் கண்டு மனம் புழுங்கும் அளவுக்கு ஒரு புதிய உணர்வை மாநாடு தந்திருக்கிறது. வேறு சமயத்தினரும் நம்முடைய தெய்விக இயக்கத்தின் வலிமையை-நம் சமய நெறிகளின் முடிந்த முடிபை-அறிந்துணரத் தக்க வகையில் மாநாடு தெளிவுற்றுத் திகழ்ந்தது.


பேரவை மாநில மாநாட்டை இவ்வாறு நடத்த வேண்டும் என்று பேரவையின் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் கூறி வந்தார்கள். கடந்த ஓராண்டாக பட்டியிலும் தொட்டியிலும் பெயரளவில் இருந்த பேரவையின் இணைப்புச் சங்கங்களுக்கெல்லாம் அவர்களே

சென்று சங்கத்தினரை உற்சாகப்படுத்தியும்-பேரவையின் சமயப் பரப்புநர்களைக் கொண்டு அவற்றைச் சீராக இயக்குவித்தும் ஆர்வம் ஊட்டினுர்கள். 'மாநாட்டை நடத்தலாம்' என்று ஒரு திடமான நம்பிக்கை எழுந்தது! நமது திருமடங்களின் மகாசந்நிதானங்களையும் அறநிலைய ஆணையர் அவர்களையும் கலந்து, திருச்சிராப்பள்ளியில் நடத்துவது என்று தீர்மானிக்கப் பெற்றது. இணைப்புச் சங்கங்களுக் கெல்லாம் "எல்வளவு பேர் கலந்து கொள்ள இயலும்?" என்று கேட்டுக் கடிதங்கள் அனுப்பப் பெற்றன.

பத்து நாட்களுக்குள் செவ்வனே இயங்கிவரும் சங்கங்களிடமிருந்து பேராளர்களின் பட்டியல்கள் வந்துவிட்டன. ஏறத்தாழ 1500 பேர் களுக்குமேல் வருவதாக எழுதியிருந்தனர். இவர்கள் தவிர-இந்து தனியார் பள்ளித் தாளாளர்கள்-இந்து இளைஞர் மன்றத்தின் மாவட்ட அமைப்பாளர்கள் உட்பட 3000 பேருக்கு மேல் கலந்து கொள்வார்கள் என்பது உறுதியாயிற்று. இத்துணைப் பேர்களையும் மாநாடு நடை பெறும் இரண்டு நாட்களிலும் எங்கே இருத்திவைப்பது என்ற கேள்வி எழுந்தபோது, திருச்சிராப்பள்ளி மாவட்ட தெய்விகப் பேரவை மனமுவந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. பேரவையின் பெருந்தொண்டர்-காவிரிதந்த குரிசில்-பேரவைத் தலைவர் அவர்களின் அடியொற்றிப் பின்செல்லும் இளவல்-திருமிகு. செ. தம்புரான் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு வரவேற்புக்குழு அமைக்கப் பெற்றது. உணர்ச்சியின் வடிவம்-செயலின் சின்னம் திரு. அரங்கசாமி செயலாளராக அமைந்தார். பிறகு கேட்க வேண்டுமா? அத்துணைப் பேராளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும், மாநாட்டில் கலந்து கொள்ளும் இதர பெருமக்களுக்கும் ஏற்ற இருப்பிடமும்-இன்சுவை யுணவும் அளிக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. அதுமட்டுமா? ஊர்வலம்-பேராளர்கள் கூட்டம்-திருமுறை-திவ்வியப் பிரபந்த மாநாடுகள்-பட்டி மன்றம்-இத்துணை ஏற்பாடுகளும் செய்யப் பெற்றன. வரவேற்புக் குழுவினர் அதில் மட்டும் திருப்தி காணவில்லை-ஊர்வலத்தில் கலந்து கொள்ளத் தாரை தப்பட்டைகள், கொம்பு எக்காளங்கள், கரக ஆட்டங்கள்-ஆலங்காரவண்டிகள்-முகபடாம் அணிந்த நான்கு யானை கள், ஊர்வலம் வருகின்ற வழிநெடுக அலங்கார வளைவுகள்-அருள் பழுத்த சான்றோர்களின் அறவுரைகள் தாங்கிய பானர்கள், இத்துணை ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்து முடித்தனர். இதற்கெல்லாம் நிதி வேண்டாமா? வரவேற்புக் குழுவினர் அதையும் திரட்டினர்.

பேரவைத் தலைவர் அவர்கள் இந்த ஏற்பாடுகளில் ஓரளவு மன நிறைவு கொண்டனர். மாநாடு அக்டோபர் 6, 7, தேதிகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. ஆயினும் 5 ஆம் தேதியே பேராளர்கள் வந்து குவிய ஆரம்பித்தனர். வந்தவர்களுக்கெல்லாம் வரவேற்புக் குழுவினர் நல்ல முறையில் உபசாரம் செய்தனர். திட்டமிட்டபடி 6-10-73 காலை 9 மணிக்கு திருச்சிராப்பள்ளி தேவர் மன்றத்தில் "திவ்வியப்பிரபந்த மாநாடு" தொடங்கியது. பேரவைத் தலைவர் அவர்

பேரவை மாநில மாநாடு



சிறப்பாக பணியாற்றிய
சமயப் பரப்புநர்
பரிசு பெறுதல்.




கிளைச்சங்கப் பேராளர் மாநாட்டில் அறநிலைய
ஆணையர் அவர்கள்.




கிளைச்சங்கப் பேராளர் மாநாடு



ஊர்வலத்தில் அப்பரடிகள் வரலாற்று அலங்கார வண்டி



மாவட்டப் பேரவைத் தலைவர்களும் செயலாளர்களும்



மாநாட்டிற்கு வந்திருந்த பேராளர்கள்



தொண்டர்களுக்கு நடுவே பேரவைத் தலைவர் அவர்கள்



ஊர்வலத்தில் ஒரு பகுதி

களின் வரவேற்புக்குப்பின், உயர்நீதி மன்ற நீதிபதி மாட்சிமிகு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். அவர்கள் தம் தொடக்கவுரையில் "தெய்வ வழிபாட்டை நாம் கடைபிடிப்பதன் மூலம் மற்றவர்களையும் அவ்வழிக்குக் கொண்டு வரமுடியும். தெய்விக நெறி உயர்ந்தால் நாடும் உயரும்; நாமும் உயர் வடையலாம்." என்று கூறினுர்கள்.

"அன்பு, ஈகை, தொண்டு மனப்பான்மையுடன் எளிமையாக வாழ்ப வர்களின் உள்ளத்தில் தெய்வம் குடிகொண்டு இருக்கும். நமது முன்னோர்கள் காட்டிய நெறிகளைப் பின்பற்றினுல், நமக்கு அந்த வாழ்க்கை தானுகவே வந்து அமையும்" என்றும் குறிப்பிட்டார்கள். பின்னர் திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் திருவாளர்கள், அரங்கராசன், பட்சிராசன் அக்கினி கோத்திரம் தாத்தாச்சாரியார், நா. பாலுச்சாமி, கா. அ. மணவாளன் ஆகியோர் முறையே, பிரபந்தத்தில் ''ஒருமைப்படு', 'அன்பியல்', 'அருளியல்', 'வாழ்வியல்' 'தொண்டு நெறி' என்னும் பொருள்கள் பற்றிச் சொற் பொழிவுகள் ஆற்றிச் செவிக்கும் சிந்தனைக்கும் சிறந்த விருந்தளித்தனர்.

மாலையில் தேவர் மன்றத்தில் திருமுறை மாநாடு நடைபெற்றது. திருச்சிராப்பள்ளிக் கோட்ட ஆட்சித் தலைவர் திரு. ச. மெய்கண்ட தேவன் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைக்க, திருக்குறள்வேள் ஜி. வரதராசப்பிள்ளை அவர்கள் தலைமையில், திருமுறைகளில், 'வாழ் வியல்,' 'அருளியல்,' 'தொண்டுநெறி,' 'தமிழக வரலாறு,' 'தத்துவ இயல்,' என்பன பற்றி முறையே திருவாளர்கள், அ. நடேச முதலியார், ச. பெரியசாமி, இலஞ்சி முத்துக்குமாரசுவாமி, க. வெள்ளைவாரணனுர், வை. இரத்தினசபாபதி ஆகியோர் ஆய்வுரை செய்தனர்.

அன்று பிற்பகலில், மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் பேரவையின் துணை அமைப்பான தமிழ்நாடு இந்து தனியார் பள்ளித் தாளாளர் பேரவையின் மாநாடு, தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ஏ. ஜி. சுப்பிரமணியம் அவர்களின் வரவேற்புரைக்குப்பின் திருவாளர்கள் எம். மேகராசன், முத்துசாமி பிள்ளை, எம். பாலகிருஷ்ணன், செய ஆதித்தன் ஆகியோர் உரையாற்றி னர். பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன். இந்த நிகழ்ச்சிக்குப் பின் அங்கேயே, பேரவையின் மற்ருெரு துணை அமைப் பான இந்து இளைஞர் மன்றத்தின் மாநிலப் பொதுக் குழுக்கூட்டம் கூடியது. மாநில இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. சுகி. சிவம் அவர்களின் வரவேற்புரைக்குப் பின், திருவாளர்கள் க. மு. சின்னசாமி, பெ. சுப்பிரமணியம், சு. இரவி, ஜீவராஜ், ப. இராசேந்திரன் முதலியோர் செயல்முறைத் திட்டங்கள் பற்றிப் பேசினர். தவத்திரு அடிகளார் அவர் களின் ஆசியுரைக்குப் பின் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

அன்று இரவு 7 மணியளவில் தேவர் மன்றத்தில், பேராசிரியர் சோ. சத்தியசீலன் அவர்கள் தலைமையில், "சமயத்திற்கு அரண் செய்த

2

பெருமை மகளிர்க்கே" என்ற கட்சியில் திருமதிகள் அன்புத்தேவி, அரங்க நாயகி, காந்திமதி, ருக்மணி ஆகியோர் வாதிட, "ஆடவர்க்கே என்ற கட்சியில் திருவாளர்கள் அ. வ. இராசகோபாலன், அ. அறிவொளி, சுகி. சிவம், துரை-நமசிவாயம் ஆகியோர் வாதிட்டனர். "சமயத்திற்கு அரண் செய்த பெருமை ஆடவர்க்கே" என்று நடுவர் தீர்ப்பளித்தார். அதன் பிறகு அதே இடத்தில் காரைமடை திரு. கா. தி. அரங்கநாதன் குழுவினரால் "பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் "என்ற தலைப்பில் நடைபெற்ற வில்லிசையுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் இனிது நிறைவுற்றன.

மறுநாள் அக்டோபர் 7-ஆம் தேதி மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின. ஏற்கெனவே வந்து குவிந்திருந்த பேரா ளர்களோடு, இரவோடு இரவாக, தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலிருந் தெல்லாம் பேருந்துகளிலும், புகைவண்டிகளிலும், மக்கள் கூட்டம் வந்து குவிந்தது. திருச்சிராப்பள்ளி நகரமே களை கட்டியது.

காலை 9 மணிக்குத் தேவர் மன்றத்தில், பேரவையுடன் இணைந்த கிளைச்சங்கப் பேராளர்களின் மாநில மாநாடு தொடங்கியது. தருமபுரம், குன்றக்குடி, காஞ்சிபுரம், மயிலம், பேரூர், சிரவணபுரம் ஆகிய ஆதீனங்களின் மகாசந்நிதானங்கள் எழுந்தருளியிருந்தனர். ஆதீன கர்த்தர்கள் அறுவரையும் ஒருங்கே கண்ட பேராளர்கள் அனைவரும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டனர். பேரவையின் துணைத் தலைவரும், அறநிலையத்துறை ஆணையருமாகிய திரு. கே. எஸ். நரசிம்மன் அவர்க ளின் வரவேற்புரைக்குப்பின், பேரவைத் தலைவர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து அருளுரை வழங்கி னார்கள். பின்னர் கீழ்க்கண்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.

1. உழுபவர்களுக்கு நில உரிமை:
   முன் மொழிந்தவர்: திரு. வேலுச்சாமிக் கவுடர், மதுரை
   வழி மொழிந்தவர்: திரு. குட்டியப்பன், தருமபுரி.
2. தீண்டாமை விலக்கு:
   முன் மொழிந்தவர்: திரு. ஆர். கே. மாரியப்பதேவர், தஞ்சை
   வழி மொழிந்தவர்: திரு. டி. என். கணேசகுருக்கள், குன்றக்குடி
3. மதம் மாறியோர்களுக்கு அரசு பதிவு நீக்கல்:
   முன் மொழிந்தவர்: திரு. ஜே. பாலசுந்தரம், திண்டிவனம்
   வழி மொழிந்தவர்: திரு. சங்கரன், கடலூர்.
4. கூட்டு முறை வாரப் பத்திரிகை:
   முன் மொழிந்தவர்: திரு. ஏ. ஜி. சுப்பிரமணியம், சென்னை.
   வழி மொழிந்தவர்: திரு. அழகுவேல் உடையார், சேலம்.
   இவர்கள் இருவரும் மேற்படி பத்திரிகை நடத்துவதற்காக தலைக்கு 1001 தருவதாக வாக்களித்துள்ளனர்.
5. பேரவை அச்சகத்திற்குப் பங்குத் தொகை:
   முன் மொழிந்தவர்: திரு. மூக்கப்பிள்ளை, திருச்சி.
   வழி மொழிந்தவர்: திரு. சொ. கிருஷ்ணன், திருச்சி.

6. இந்து சமயப் பாதுகாப்பிற்குத் திருமடங்கள் ஒத்துழைப்பு:
முன் மொழிந்தவர் : திரு. டி. கோவிந்தன், திருவாடானை.
வழி மொழிந்தவர் : திரு. இராமசாமி, காளையார் கோவில்.

7. சமய நிறுவன வருவாயில் 10 விழுக்காடு பேரவைக்கு ஒதுக்குதல்:
முன் மொழிந்தவர் : திரு. பெ. அரங்கநாதன், சேலம்.
வழி மொழிந்தவர் : திரு. மு. சு. சங்கர், திருநெல்வேலி.

8. தொண்டர், தந்தையார், துறவி பயிற்சி:
முன் மொழிந்தவர் : திரு. ஸ்ரீ குமார், பி. ஏ., கன்னியாகுமரி
வழி மொழிந்தவர் : திரு. வி. பி. சுப்பராயன், கடலூர்.

9. பேரவையை மக்கள் இயக்கம் ஆக்கல்:
முன் மொழிந்தவர் : திரு. சக்திவேல், தென்னூர்க்காடு.
வழி மொழிந்தவர் : திரு. சுகி. சிவம், சென்னை.

10. கடவுள் நம்பிக்கை உடையவர்களை மட்டுமே அறங்காவலர்களாக நியமித்தல்:
முன் மொழிந்தவர் : திரு. கா. தி. அரங்கநாதன், கோவை.
வழி மொழிந்தவர் : திரு. வி. ஆர். அண்ணாமலை முதலியார், வேலூர்.

11. நாத்திகத்தை ஒழித்து, மரபைக் காக்கத் திருமடங்கள் துணை:
முன் மொழிந்தவர் : திரு. பெ. சுப்பிரமணியம், தஞ்சை.
வழி மொழிந்தவர் : திரு. இராசேந்திரன், திருச்சி.

12. இந்து சமய மக்கள் அனைவரும் பேரவை உறுப்பினராதல்:
முன் மொழிந்தவர் : திரு. வை. இரத்தினசபாபதி, எம்.எ., பூம்புகார்.
வழி மொழிந்தவர் : திரு. வ. சத்தியமூர்த்தி, ஆம்பூர்,

13. திருக்கோயில் ஊழியர்கட்கு ஊதிய உயர்வு:
முன் மொழிந்தவர் : திரு. பூ. சாம்பமூர்த்தி, தூத்துக்குடி.
வழி மொழிந்தவர் : திரு. அ ஜகதீசன், தூத்துக்குடி.

14. அறநிலைய உதவி ஆணையருக்குக் கூட்டுறவு அதிகாரிபோல் வசூல் செய்யும் அதிகாரம்:
முன் மொழிந்தவர் : திரு. பால்நாடார், கன்னியகுமரி.
வழி மொழிந்தவர் : திரு. க. மீனாட்சிசுந்தரம், மதுரை.

எல்லாத் தீர்மானங்களும் நிறைவேறின. எழுந்தருளியிருந்த எல்லா குருமகாசந்நிதானங்களும் ஆசியுரை வழங்க முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

அதன் பின்னர் பேராளர்கள் எல்லாரும், திருச்சிராப்பள்ளி, வரகனேரி தஞ்சாவூர் ரோடிலுள்ள திரு. த. செவந்திலிங்கம் முத்திரியர் உயர் நிலைப்பள்ளிக்குச் சென்று அறுசுவை உண்டி உண்டு, ஊர்வலத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

பிற்பகல் 3 மணிக்கு, மலைக்கோட்டை மௌனமடத்தில் தெய்விகப் பேரவையின் மாநிலக் குழுக் கூட்டம் கூடியது. மகா சந்நிதானங்கள் அனைவரும் எழுந்தருளியிருந்தனர். பேரவையின் துணைத்தலைவர் அவர்களும், மற்றும் துணை ஆணையர்களும் உதவி ஆணையர்களும்

வந்திருந்தனர். எல்லா மாவட்டத் தலைவர்கள், செயலாளர்கள் முதலியோரும் அழைப்பின்போல் வந்திருந்தார்கள். பேரவைச் செயலாளர் திரு. அ. நாராயணசுவாமி அவர்கள் ஆண்டறிக்கையைப் படித்தார்கள் அதன்பின் பேரவையின் ஆண்டு வரவு செலவுத் திட்டம் பரிசீலனை செய்யப்பெற்று மாநிலக் குழுவினால் அங்கீகரிக்கப் பெற்றது.

மாலை 5 மணிக்கு வரகனேரி த. செவந்திலிங்கம் முதலியார் உயர் நிலைப்பள்ளியிலிருந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஆரவாரங்களையும், 'ஒழிக' என்ற கோஷங்களையும் ஊர்வலங்களில் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன காதுகள் எல்லாம் வாழ்க்கைக்குத் தேவையான-ஆன்றோர்களின் அறவுரைகளை-அவற்றின் முழக்கங்களைக் கேட்கத் தயாராக-ஊர்வலம் செல்கின்ற பாதை நெடுக மக்கள் குழுமியிருந்தனர். முதலில் தாரை, தம்பட்டம், கொம்பு, எக்காளம் முதலியன முழங்கிச் சென்றன.

ஊர்வலத்தின் முன்னே இரண்டு யானைகள் மீது தொண்டர்கள் இடபக் கொடியும், கருடக் கொடியும் ஏந்திச் செல்ல அதன்பின்னே அரங்கநாதர் ஆலயத்தினரின் ஆண்டாளின் அருளிப்பாடுகளை விளக்கும் அழகான வண்ண ஓவியங்களைத் தாங்கிய அலங்கார வண்டி அசைந்தாடி வந்தது. அதையடுத்து மலைக்கோட்டை தாயுமானார் திருக்கோயிலார் அமைத்துத் தந்த தாயுமானவர் (தாயும் ஆனவர்) வரலாற்று அலங்கார வண்டி வந்தது. நாதசுர இசை முழங்கி வந்தது. அதற்குப் பின்னே 2 யானைகளில் பன்னிரு திருமுறைகளும், திவ்வியப்பிரபந்தமும் எழுந்தருளிச் செய்யப்பெற்று எடுத்து வரப்பெற்றன. கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரை முதலிய வந்தன.

திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கும் வண்ணப் படம் வரையப்பெற்ற வண்டி, சீர்காழிக் கோயிலின் சார்பில் வர, தருமையாதீனத்தின் சார்பில் திருமுறை வாணர்கள் பண்ணோடு இசைபாடிப் பரவி வந்தனர்.


அதற்கு அடுத்தாற்போல் இராமானுசரின் வரலாற்று நிகழ்ச்சிகள் தாங்கிய வண்டியொன்று ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலயத்தின் சார்பில் வர, அதன் பின்னே "அத்தியாபாகர்கள்" நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை முழங்கி வந்தனர்.

பின்னர் தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த பேரவை இணைப்புச் சங்கங்களின் சார்பாளர்கள் அமைதியாக அறவொலிகளை முழங்கிக் கொண்டு வந்தனர்.

இளைஞர் சமுதாயமே எழுச்சி கொண்டு திரண்டு வந்து விட்டதோ என்று கருதும்படி, இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் ஏராளமான இளைஞர்கள் இடபக் கொடியும் கருடக் கொடியும் ஏந்தி, முழக்க மிட்டுக் கொண்டு வந்தனர். புள்ளிருக்கும் வேளூர் என்ற வைத்தீசுவரன் கோயில் வரலாற்றை விளக்கும் வகையில் அமைத்த அலங்கார



ஊர்வலத்தில் இளைஞர் மன்றப் பேராளர்கள்




அறநிலைய அமைச்சர் அவர்களுக்கு வரவேற்பு




கிளைச்சங்கப் பேராளர் மாநாட்டில் தருமபுர ஆதீன குருமகாசந்நிதானம்
அவர்கள் அருளுரை




அப்பரடிகள் மலர் வெளியீடு-சிலம்புச் செல்வர்



பொதுக்கூட்டத்திற்கு வந்திருந்த பெருமக்கள்



மகாசந்நிதானங்களின் அருளுரையைச் செவிமடுக்கும் மக்கட் கூட்டம்



பேரவையின் சின்னம்.-தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில்! நவம்பர் 5, 6 தேதிகளில் சதயப் பெருவிழா நடைபெறுகிறது

வண்டிக்குப் பின்னே பள்ளி மாணவ மாணவியர் ஆடிப்பாடி வந்தனர். அரண்மனைக்குறிச்சி சார்பில் வந்த அலங்கார வண்டியை அடுத்து மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் அணிவகுத்து வந்தனர்.

குன்றக்குடி அருள்நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் அருள்நெறித் தந்தையாம் அப்பரின் வரலாற்று நிகழ்ச்சிகள் வரையப்பெற்ற அலங்கார வண்டி, வண்ண வண்ண மின்விளக்குகளுடன் வந்தது. அதில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கியில் திருமுறை முழங்கி வந்தது. தஞ்சையைச் சேர்ந்த நண்பர் திரு. சீனிவாசன், திரு. இரமணன் ஆகியோர் மேற்படி வண்டியில் உரையாடல் செய்து சுவையூட்டினர். அதற்குப் பின்னே மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் அணிவகுத்து வந்தனர். இறுதியாக த. செ. மு. உயர்நிலைப்பள்ளியின் சார்பில் வந்த வண்டியில் வேடம் புனைந்த மாணவ மாணவியர் ஆடிப் பாடி வந்தனர். அவர்களுக்குப் பின்னே ஏராளமான பொதுமக்களும் பிரமுகர்களும், வெளியூர்களிலிருந்து பேராளர்கள் வந்த பேருந்துகளும் வந்தன. ஊர்வலம் வரகனேரியிலிருந்து புறப்பட்டு, காந்தி மார்க்கெட்டு, கடைவீதி, மலைவாசல், மெயின் கார்டு கேட், மேலப்புலிவார்டு ரோடு வழியாகத் தேவர் மன்றத்தை அடைந்தது. ஊர்வலம் வந்த வழி நெடுக பாதையின் இருமருங்கிலும் ஏராளமான மக்கள் குழுமியிருந்து கண்டு கேட்டு இன்புற்றனர். மலைக்கோட்டை வாயிலில் (மெயின் கார்டு கேட்) உள்ள ஒரு மாடியிலிருந்து மகாசந்நிதானங்களும், ம.பொ.சி முதலியோரும் ஊர்வலம் செல்வதைப் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள்.

இரவு 8 மணியளவில் தேவர் மன்றத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். இறைவணக்கத்திற்குப் பின், பேரவைத் தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். வரவேற்புக் குழுத்தலைவர் திரு. செ. தம்புரான் அவர்கள் மகாசந்நிதானங்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் வரவேற்பிதழ் வாசித்தளித்தார். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", என்பதையும் தீண்டாமை ஒழிப்புப் பற்றியும் விளக்கிப்பேசினார்கள் மேலும் தற்போதைய அரசு தாழ்த்தப்பட்டவர்களை அறங்காவலர்களாக நியமித்துள்ளதைச் சுட்டிக் காட்டினார்கள். அவர் தொடர்ந்து பேசுகையில் "அறக்கட்டளைகள், கோவில்கள் ஆகியவற்றின் சொத்துக்களுக்கும்–நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு நிச்சயம் செய்யும்" என்றும், "நகர்ப்புற வீடுகள் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் மத சார்புள்ள எல்லா நிறுவனங்களுக்கும் விதி விலக்கு அளிக்க அரசு முடிசெய்திருக்கிறது" என்றும் குறிப்பிட்டார்.

அருளோசை வினாவிடைப் பகுதியில் நல்ல மதிப்பெண் பெற்றவர்களுக்கும், சமயப்பரப்புநர்களில் சிறப்பாகச் செயலாற்றியவர்களுக்கும் பரிசு வழங்கிய உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தமிழையும் தமிழனின் பழைய மரபுகளையும் கட்டிக்

காப்பதில் தற்போதைய அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருவதை எடுத்துக் கூறினார்கள். அமைச்சருடைய சொந்த ஊரான "அன்பில்" தலத்தின் பெயரை, திருமுறைகளில் வழங்கியபடி "அன்பில் ஆலந்துறை" என்று மாற்றுவதற்கு வழிவகைகள் செய்யும்படி அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களை, உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

"அப்பரடிகள்" மலரை வெளியிட்டுப் பேசிய, தமிழ்நாடு மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் மாண்புமிகு ம. பொ. சிவஞானம் அவர்கள் தற்போதைய அரசு கோயில்களுக்கு எதிரான எந்தவிதச் செயல்களிலும் ஈடுபடாது என்பதை வலியுறுத்தினார்கள். கூட்டங்களைக் கட்டுப்படுத்தச் செல்லும் காவலர்கள்போல், தாமும் தவத்திரு. அடிகளார் அவர்களும் மேலவையில் காவலர்களாகவே இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டார்கள்.

தருமபுர ஆதீனகர்த்தர் திருவருள்திரு சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனத் தலைவர் திருவருள்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுரம் ஆதீனத் தலைவர் திருவருள்திரு. சிவஞானபாலய சுவாமிகள், பேரூர் ஆதீனத் தலைவர் திருவருள்திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார், கோவை சிரவணபுரம் ஆதீனத் தலைவர் திருவருள்திரு. சுந்தர சுவாமிகள் ஆகியோரின் ஆசியுரைக்குப்பின் வரவேற்புக்குழுச் செயலாளர் திரு. அரங்கசாமி அவர்கள் நன்றி கூறினார்கள். இத்துடன் மாநாட்டின் இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் இனிதே நிறைவெய்தின. இரண்டு நாட்களிலும் எல்லா நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்காக அயராது உழைத்த திரு. செ. தம்புரான் அவர்களைத் தலைமையாகக் கொண்ட வரவேற்புக் குழுவினர், எல்லோருடைய பாராட்டுதலுக்கும் உரியவராவர். அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் ஐ.ஏ.எஸ். அவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அறிவுரைகள் வழங்கியயது மாநாட்டுக்குப் பொலிவூட்டுவதாக அமைந்திருந்தது. மற்றும் அறநிலையத் துணை ஆணையர், உதவி ஆணையர், திருவரங்கம், மலைக் கோட்டை, திருவானைக்கா முதலிய கோயில்களின் செயல் அலுவலர்கள் மாநாட்டுக்கு அனைத்து வகையிலும் துணைபுரிந்தமைக்கு பேரவை நன்றி பாராட்டுகிறது.

பேரவைத் தலைவர், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து எழுதியுள்ள கடிதத்தில் பின் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள். "ஏற்கெனவே நமக்கிருந்த நிறுவன அமைப்புக்கள் ஒன்றல்ல இரண்டல்ல-ஆயிரமாயிரம் திருக் கோயில்கள் திருமடங்கள்! ஆயினும் பிறசமய நெருக்கடிகளிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளமுடியாமலிருந்திருக்கிறது. பகுத்தறிவு என்ற பெயரால் நம்முடைய சமயத்தை-சமய மரபுகளை நடுத்தெருவில்

கேலி செய்தாலும் தட்டிக் கேட்க முடியாமலிருந்தோம். ஏன்? சமய நம்பிக்கையுடையோரிடத்தில் ஒருமையில்லை. ஒருமையின்மையால் வலிமையில்லை. வலிமையின்மையால் உணர்வில்லை. உணர்வின்மையால் உள்ளீடு இல்லை. இத்தனையும் இன்மையால் ஆண்மையில்லை. இந்தக் கடந்த கால வருந்தத்தக்க வரலாற்றைத் திருச்சிராப்பள்ளி மாநில மாநாடு மாற்றி எழுதியிருக்கிறது. காவிரி கரையுடைத்து வந்தது போல் உணர்ச்சி வெள்ளம்! ஏழாவது நூற்ருண்டில் திருஞான சம்பந்தர் பின்னே வந்த பாண்டி வெள்ளமனைய வெள்ளம்–அருள் இராமாநுசர் பின்னே வந்த அரங்கத்து அருள் வெள்ளம் போல இருந்தது. இந்த வெள்ளப் பெருக்கை வற்ருது வளர்க்க வேண்டியது நம் அனைவருடைய பொறுப்பாகும்.

"நாம் அனைவரும் சேர்ந்து திருச்சிராப்பள்ளியில் ஓர் ஒளிவிளக்கை ஏற்றினேம். சமய உலகை ஒளிர வைத்தோம். நாம் அனைவரும் திருச்சிராப்பள்ளியில் அரங்கத்தண்ணல் அருட்பெருக்கும், தாயுமானுர் தண் கருணையும் பெற்று அணையா விளக்கை ஏற்றினேம். இனி அந்த ஒளிவிளக்கை என்றும் அணையாமல் காக்க உலைவின்றி உழைப்போமாக!" என்று கூறியுள்ளார்கள்.

"இந்த வகையில் ஒவ்வோர் இந்துவும் பேரவையைத் தங்கள் சொந்த அமைப்பாகக் கருதி, அதை ஒரு பேரியக்கமாக வலிமைப் படுத்த, தங்களால் இயன்ற ஒத்துழைப்பைத் தருவார்கள் என நம்புகிருேம்."

சிவனடியார் வரலாறு

சத்தி நாயனர்

தாமரை மலர்களிலிருந்து பொழிகின்ற தேன் குளத்தை நிறைத்ததோ என விளங்கும் வளமையும், ஒரு செங்கோலால் எட்டுத் திசைகளிலும் "ஆணைச் சயத்தம்பம்" நாட்டிய அரசியற் சிறப்பும் பொருந்திய சோழ நாட்டில் வரிஞ்சையூர் எனும் பதியினில், வாய்மை மிக்க வேளாண் குலம் பெருஞ் சிறப்புப் பெறுமாறு பிறந்து, சிவனடியார்களைத் "தீங்கு சொன்ன திருவிலர் நாவினை" தண்டாயத்தினுல் இடுக்கி, கத்தி கொண்டு வலித்து அரியும் அரிய சத்தியினுல் "சத்தியார்" எனும் திருப்பெயர் பெற்ருர். இதனைச் சேக்கிழார் பெருமான்,

"அத்தராகிய அங்கணர் அன்பரை
இத்தலத்தில் இகழ்ந் தியம்பும் உரை
வைத்த நாவை வலித்தரி சத்தியால்
சத்தியார் எனும் நாமமும் தாங்கினர்"

என்று அருளிச் செய்துள்ளார்.

இவ்வியனுலகில், அரன் அடியார்தமை இகழ்ந்து பேசியவர், யாவரே ஆயினும் நாவரியும் சத்தியார் திருத்தொண்டின் நலத்தைச் சேக்கிழார் பெருமான் "ஆண்மைத் திருப்பணி" எனப் போற்றுவர். இத்தகைய அரிய திருப்பணியைத் தலைக் கொண்டு தனிநின்று 'பன்னெடும் பெருநாள்' உண்மை அன்புடன் ஆற்றி "வையம் உய்ய மணி மன்றுள் ஆடுவார் செய்ய பாதத் திருநிழல் சேர்ந்தார்," வீரத் திருத்தொண்டராம் சத்தி நாயனர்.

—மருதமலையான்.

பிரமாதீச ஆண்டு ஐப்பசித் திங்கள் 3-ஆம் நாள் (19-10-73) வெள்ளிக்கிழமையன்று, சத்தி நாயனரின் திருநட்சத்திரமாகிய பூசத்தையொட்டி வெளியிடப்பெற்றது.

உ

சிவமயம்



சிவ லிங்கம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சிவலிங்கம் என்பது வடசொல். அதனைத் தமிழிற் பொருள் கொள்ளுங்கால், சிவனுக்கு லிங்கம் என நான்கனுருபு விரித்துக் கூறல் வேண்டும். சேக்கிழார் பெருமானுர் சாக்கிய நாயனுர் புராணத்திலே,

"காணுத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணுகம் பூண்டார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணுது நேடியமால் நான்முகனும் காண நடுச்
சேணுருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்"

நாடோறுஞ் சிவலிங்கம் கண்டுண்ணு மதுநயந்து
மாடோர் வெள்ளிடை மன்னுஞ் சிவலிங்கம் கண்டு மன
நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார்
பாடோர் கற்கண்டதனைப் பதைப்போடும் எடுத்தெறிந்தார்.

என்று பாடியருளியவற்றிலே நீணுகம்பூண்டார்க்கு என நான்கனுருபு கொடுத்துப் பொருளை விளக்கியதைக் காண்க.

சிவலிங்கம்—சிவனுக்கு லிங்கம். சிவனுக்கு, நீணுகம்பூண்டார்க்கு, லிங்கம்-குறி. சிவனுக்கு லிங்கம்-நீணுகம்பூண்டார்க்கு நிகழ்குறி. சிவலிங்கம் என்றதும் நீணுகம்பூண்டார்க்கு நிகழ்குறி என்றதும் பொருளொருமை யுள்ளன என்று புலப்படுத்தல் கருதி, இரண்டற்கும் இடையில் 'ஆம்' என்னும் சொற்சேர்த்து,

'நீணுகம் பூண்டார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்' என்றருளினுர்.

இச்சிவலிங்கம் அருவம், அருவுருவம், உருவம், இம்மூன்றையும் கடந்த உண்மையுணர்வாகிய ஞானம் என்னும் நான்கு திறமாகும், முதன் மூன்றும் தடத்தம் எனப்படும். நாலாவது சொரூபம் (ஸ்வரூபம்)-தன்னுரு எனப்படும். சிவஞான சித்தியாரிலே (சுபக்கம். 58-முதல்) திருவுருவாராய்ச்சியிலே, இந்நான்கும் விளக்கப்பட்டன. மாயாகாரிய வடிவம் அன்று. ஞானசத்தியுருவமே என நிலை நாட்டினுர் அருணந்தி தேவநாயனுர். அலகிலா அறிவன் என ஞான சொரூபத்தையுரைத்தார், அருவம் உருவம் என்னின் உலகப் பொருள்களுள் ஒன்ருய் விடுவன். ஏன் ?

" உலகினிற் பதார்த்தம் எல்லாம் உருவமோ டருவம் ஆகி
நிலவிடும். ஒன்று ஒன்ருகா நின்ற அந்நிலேயேபோல,
....
குலவிய பதார்த்தத் தொன்ருய்க் கூடுவன் குறித்திடாயே." (63)

என அருவத்தையே மறுத்தமையால், அருவுருவம், உருவம் இரண்டும் சொரூபம் அல்ல. தடத்தமே என்று சொல்லவாவேண்டும்? 'அருவினுக்கும் உருவினுக்கும் காரணம் என்றதை' யுணர்தல் கடன்.

அச்சிவலிங்கத்தைக் காணுது தேடியவர் நான்முகனும் மாலும் எனப் புராணம் புகலும். காணுது நேடிய அவ்விருவருங்காண நடுவே வானிட மெல்லாம் நிறைந்து 'தழற்பிழம்பு' ஆகித் தோன்றினுன் சிவபெருமான். அத்தீப்பிழம்பு உருவமும் அன்று; அருவமும் அன்று. அருவுரு இரண் டற்குங் காரணமாய்த் தோன்றியதோர் உரு. அது திருக்கோயி லுள்ளே 'சிவலிங்கம்' என நாம் தொழக் கண்ணுற் காணப்பெறும் வடிவுடையதன்று. தீப்பிழம்பு அவ்வடிவில் நில்லாது. மாலுக்கும் நான் முகனுக்கும் தோன்றிய தழற்பிழம்பு உலகில் எல்லார்க்கும் தெரிந்திலது. ஒருவர் மேடையிலிருந்து இராகம் பாடினுர். அங்குப் பலர் அதனேத் தோடி என்று களித்தனர். ஏனேயோர்க்கு, ஒலியின் சிறப்புருவாகிய தோடி என்ற பெயரும் தெரியாது. அப்பெயர்ப் பொருளும் தெரியாது- தோடி என்று களித்தார் போல்வார் மாலும் இருவர். தோடியுருப் போல்வது தழற்பிழம்பு. தோடிபோல்வது அத்தழற்பிழம்பாய் நின்ற சிவம். அத்தழற்பிழம்பு வேறு சிவம் வேறு. சிவம் தழற்பிழம்பாயிற்று. ஆயினும் பிழம்பும் பிழம்பாய சிவமும் வெவ்வேறே.

" ஆனுய் என்பதனேத்தும் அவ்வகை
தாளுகாமையைச் சாற்றிடும் என்க" (சங்கற்பநிராகரணம்.
12:-80-1)

தோடியுருவினும் தோடியினும் தோடியாயிசைந்த இசைவேறு. அவ்விசையினும், இசைத்த ஒலி வேறு. ஒலியினும் (நாதத்தினும்) அவ்வொலியுருவாய் நின்ற ஞானசத்திவேறு. அத்திருவருண் ஞானம் வேறு. அதனேச் சொருபமாக உடைய சிவம் வேறு. வித்தியாதேகம் சிவபூசை செய்வோர்க்குத் தெரியலாம்.

இசையில் வெவ்வேறுண்டு. எழுத்திசையும் அவற்றுள் ஒன்ருகும். எழுத்து :—எழு + து = எழுத்து. எழுச்சியது. எழுது + உ = எழுத்து இது வரிவடிவு குறித்த பெயர். எழுதப்படுதலின் எழுத்து என்றனர் புலவர். எழுத்தொலி கண்ணுக்குப் புலனுகாது; செவிக்குப் புலனுகும் உருவுடையது, உரு கட்புலனுகாதது. வடிவு செவிப்புலனுகாதது.

அ ஆ முதலியன கட்புலனுகாது, செவிப்புலனுகும் ஒலியுருவுடை யன. இன்றேல் குறுமை, நெடுமை, குற்றெழுத்து, நெட்டெழுத்து, இகரம் ஈகாரம் முதலியவற்றின் வேறுபட்ட ஒலியுரு முதலியன தோன்ற மாட்டா. எல்லாவெழுத்தொலியுள்ளும் சிவம் உளது. உண்மையால் வடமொழி தமிழ் இரண்டினுள்ளும் ஐம்பத்தோரக்கரத்தான், தமிழன் கண்டாய், என்று சிவனேக் கூறுகின்றன என நான்மறை பயின்ருேன் நவின்ருன். வரிவடிவில் எழுதப்பட்ட (எழுத்து) எல்லாம் ஒலியுருவின் புறக்குறி. திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி புறக்குறியே. அது தச்சர் முதலியவராற் செய்யப்பட்டது.

சிவலிங்கம் 'எல்லாவுலகமும் ஆனாய் நீயே' என்றும், 'ஏகம்பம் மேவியிருந்தாய் நீயே' என்றும் அகண்டம், கண்டம் என இருவேறு வகையாகக் கூறப்பட்டமை காண்க. மானிடர் வடிவு உருவம். காற்றினது அருவம். இவ்விரண்டற்கும் காரணம் சிவலிங்கம் "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள் நாகம் பூண்டார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்" என்றருளியதிற் காரணமாய் நிகழ்குறி எனவும் அருவுரு இரண்டற்கும் காரணக்குறி எனவும் நாகம் பூண்டார்க்கு நிகழ்குறி எனவும் உணர்த்தியருளிய உண்மையை அறிதல் எளிதன்று.

மானிடராக்கை உருவம், திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி. அருவம் உருவம் இரண்டற்குங் காரணக்குறி (சிவலிங்கம்). அவ்வாக்கையை இச்சிவலிங்கம் போலப் படம் எழுதிக் காட்டுவது அவரவர் அறிவிற்றோன்றியதை ஆதாரமாகக் கொள்வதே அன்றி, விதியோ, ஆகமப் பிரமாணமோ காட்டி நிரூபணம் செய்யப்படுவதன்று. படம் எழுதிக் காட்டியவர் ஆகமப்பிரமாணத்தைப் பொருட்படுத்தாமல் எழுதிய இடம் பல உள. அவற்றைத் தனிக்கட்டுரையிற் காட்டுவோம்.

'மானிடராக்கை வடிவு சிவலிங்கம்' என்றதன் தாற்பரியம், "அறிவரியான், தனை அறிய, யாக்கை ஆக்கி, அங்கங்கே உயிர்க்குயிராய் அறிவு கொடுத்து, அருளாற் செறிதலினால், திருவேடம் சிவனுருவே ஆகும்." என்ற சிவஞானசித்தியார் திருவிருத்தத்தின் கருத்து ஆகும். யான் சிவம் ஆய் விட்டால், யான் வாழும் இவ்யாக்கை, அச்சிவனுக்கு லிங்கம். யான் இல்லை. எனக்குடல் இஃது அன்று.

காயமே கோயில், ஊனுடம்பு ஆலயம், ஓங்குடலம் திருக்கோயில் என உடம்பைக் கோயிலாக் கூறிய கருத்தை உணர்தல் வேண்டும். "வினைபடும் உடல் நீ புகுந்து நின்றமையால் விழுமிய விமானம் ஆயினதே" என்ற திருவிசைப்பாக் கருத்தை ஆராய்க. நீ இவ்வுடலிற் புகுந்து நின்றதால் இவ்வுயிர் நீயாய் விட்டது. நீயாய் மட்டும் இருப்பதால், சிறந்த கோயிலாய் விட்டது என்றார். உடம்பு கோயிலாயதால்; ஜீவன் சிவலிங்கம். அச்சிவலிங்கத்திலே சாந்நித்தியமாகி, வழிபட்டவர்க்கு அருளும் சிவனே, அச்சிவலிங்கத்தினின்று வழிபாட்டை யேற்றுக் கொண்டருளும் ஜீவன்.

"ஓங்குடலம் திருக்கோயில் உள்ளிடம் உள்ளிடமாம்
உட்டொழிலும் புறத்தொழிலும் உரியவரே புரிவார்
தீங்கில்உயிர் சிவலிங்கம் சிவன் சீவன், யாதும்
செயவேண்டா பசுஞானம், சிவஞானம் சிறந்த பாங்கது."

என ஞானபூசா விதி கூறுகின்றது. சிவஞான போதத்திற்குத் துறைசை அம்பலவாண சுவாமிகள் அருளிய (உண்மை) உரையில்,

சிவாலயங்களில் எழுந்தருளி மௌனமாய்ப் பூசை அபிடேகம் திருவிழாச் சிறப்பு முதலானவையும் கொண்டருளி எல்லாவுயிர்களுக்கும் வரம் கொடுத்துக் காத்தருளும் சிவலிங்கப் பெருமான் எனப் பரார்த்த பூஜா மூர்த்தியையும், ஆசாரியர் எழுந்தருளப் பண்ணிக் கொடுத்த சிவலிங்கம் என ஆன்மார்த்த பூஜா மூர்த்தியையும் வேறுபாடுணர்த்தும் அருண் மொழிகளை நோக்குதல் வேண்டும். பரார்த்த பூஜாலிங்கத்திலே சிவபெருமானே சிவலிங்கமாகத் தோன்றியருள்கின்றார். ஆன்மார்த்த பூஜாலிங்கத்திலே ஆன்மா சிவலிங்கமும் அதில் நின்று அருள்கின்றவர்

சிவபெருமானுர் என்றும் அறிதல் வேண்டும், "தீங்கில் உயிர் சிவலிங்கம் சிவன் சீவன்" என்றருளிய உமாபதி சிவனுர் திருமொழியை இங்கு நோக்குக. இவ்வேறுபாடு தெரியாமல் வழங்குவது நன்றன்று. திருமூல தேவநாயனுர், சிவலிங்கம் எல்லாரும் அறியப்படும் எளிய தன்று. எவரும் அறியார். எட்டுத்திசையும் சிவலிங்கமே. அறுபத்து நான்கு கலையும் சிவலிங்கமே. உலகமெல்லாம் சிவலிங்கமே என்ருர். எல்லா வுலகமும் ஆனுய் நீயே' என்று திருநாவுக்கரசர் அருளினுர்.

(அரன்நிலை) திருக்கோயிலுள், சிவலிங்கம் பதி, சதாசிவன்-சூக்கும லிங்கம் திருநந்தி பசு. பலிபீடம் பாசம். பத்திரலிங்கம். திருக்கோயில் விமானம்—ஸ்தூலலிங்கம்

தூய விமானமும் தூலமதாகுமால்
ஆய சதாசிவம் ஆகும்நற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார்கட்கே. (1718)

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே. (2411)

விடை-பசு, விடையேறி-பசுபதி.

அண்டலிங்கம் எல்லாவுலகிற்கும் அவகாசமான பேரண்டத்தையும், பிண்டலிங்கம் எல்லாவுடம்பையும், சதாசிவலிங்கம் (பெரியபுராணம் உணர்த்திய) காரணலிங்கத்தையும், ஆன்மலிங்கம் சிறப்பாகப் பற்றற்ற முத்தர்களையும், பொதுவாக எல்லாவுயிர்களையும், ஞானலிங்கம் பரா சத்தியையும் குறித்து நிற்கும் உண்மையைத் திருமந்திரத்தில் அறியலாம்.

சிவம், சத்தி, நாதம், விந்து நான்கும் அருவலிங்கம். சதாசிவம் அருவுருலிங்கம். மகேசன், ஈசன், மால், அயன் நான்கும் உருவலிங்கம். மகேசலிங்கம் (உருவலிங்கம்) மட்டும் இருபத்தைந்துருவலிங்கமாக விரிந்தது. அவற்றுள், தக்ஷிணுமூர்த்தி சுவாமி முதலியவை யோக வடிவம். சோமாஸ்கந்தர் முதலியவை போகவடிவம். வீரபத்திரர் முதலியவை கோரவடிவம்.

"போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுதல் என்றும் ஓரார்
வேகியா னுற்போற் செய்த வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்."

இருபத்தைந்து மகேசுர மூர்த்தங்களையும் நம் உருவத்தையும் வடிவத் தையும் ஒப்பவைத்துணர்தல் வேண்டும்.

வீரசைவத்திலே உள்ள தமிழ் நூல்களாகிய சித்தாந்த சிகாமணி, அத்துவிதவெண்பா முதலியவற்றில் 'சிவலிங்கத்தை' மிக்க தெளிவுண் டாக்கும் முறையில் உணர்த்துமாறு காணலாம். அடுத்த கட்டுரையில் அம்முறைமை எழுதப்படும்.



நின்றவூர்ப் பூசல் அன்பன்

[திரு. க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,]

"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்பது அருந்தமிழ் மூதாட்டியான ஔவைப் பிராட்டியின் திருவாக்கு. அப்பெருந்திரு நாட்டிலே சீலமிக்க மறையோர் வாழும் செல்வமல்கி விளங்குவது திருநின்றவூர். அவ்வூரில் சிவபெருமான் கழலன்றி வேறு எதையும் சிந்தை செய்யாத அருமறை அந்தணர் ஒருவர் வாழ்ந்தார். கொன்றை வேணிச் சடைமுடிப் பெம்மானுக்குக் கோயில் கட்ட மனத்துக் கொண்டார். நிதியில்லாமல் அவ்வாறு எண்ணிவிட்டார். அதை நினைந்து மனம் நைந்தார். மனத்தினால் தினைத்துணை முதலாகத் தேடி நிதி திரட்டினார். மனத்தினால் செய்ய முடியாத காரியங்களுமுண்டோ? கட்டட சாதனப் பொருள், தச்சர்கள் முதலியவற்றைத் தேடினார்; நன்னாள் பார்த்து கடைகால் போட்டார். அடிமுதல் உபானம் வரையில் எல்லாப் படைகளையும் வடிவழகுடன் வகுத்தார்; சிகரத்தையும் அமைத்தார்; இவையெல்லாம் நீண்ட நாள் நினைவால் செய்தவை தூபி நட்டு, அற்புதச் சிற்பச்சுதை வேலை செய்தார்; கிணறு அமைத்தார்; மதில் கட்டினார்; திருக்குளம் தோண்டினார்; சிவபெருமானைப் பிரதிட்டை செய்ய ஒரு நல்ல நாள் பார்த்திருந்தார்.

பல்லவ மன்னன் காஞ்சிபுரத்தில் சிவபெருமானுக்கு ஒரு பெருங் கோயில் எடுத்தான். குடமுழுக்குக்கு ஒரு நாள் குறித்தான். அந்நாளுக்கு முன்னாள் பிறைமுடிப்பிஞ்ஞகன் அவன் கனவில் தோன்றி "திருநின்றவூர் பூசலார் என்ற அன்பன் நீண்ட நாள் நினைத்து அமைத்த பெருங்கோயிலில் நாம் நாளை புகுவோம். எனவே, நீ இங்கு நாளை செய்யவிருந்ததை ஒழித்து வேறொரு நாள் கொள்வாயாக" என்று பணித்தார். துயில் நீங்கிய காடவர்கோன் அத்திருப்பணி செய்தவரைக் கண்டு வணங்க வேண்டுமென்று எண்ணினான். சோலைசூழ் நின்றவூரை அடைந்தான். அங்குள்ளோரை 'பூசலார் கட்டிய கோயில் எங்குள்ளது' என்று கேட்டான். பூசலார் அப்படி ஒரு கோயில் அமைக்கவில்லை யென்று அவர்கள் சொன்னார்கள். அவ்வூர் மறையோரை எல்லாம் எல்லீம் அழைத்துக் கொண்டு பூசலார்பால் நண்ணினான்; வணங்கி

னன். "தாங்கள் இங்கு எடுத்த கோயில் யாது? அண்டர் நாயகர் இன்று அதில் எழுந்தருளும் நாள் என்று தெரிந்து தங்களைக் கண்டு அடிபணிய வந்தேன்" என்று கூறினன் பல்லவவேந்தன். அவ்வள வில் பூசலார் திகைத்தார். "இறைவன் அருள் என்னையும் ஒரு பொருட்டாகச் செய்த திருவிளையாடல் என்னே" என்று எண்ணி தாம் மனத்தினல் சிந்தித்துக் கோயில் கட்டிய வரலாற்றை அரசனுக்கு எடுத்துரைத்தார். காடவர்கோனும் சிந்தையால் கோயில் செய்த அன்பரின் பெருமையை வியந்து அவரைப் பணிந்து காஞ்சிபுரத்திற்குத் திரும்பினன். சிந்தனைச் சிற்பியான பூசலார் நாயனரும் தம் நினைவால யத்தில் தாபித்த சிவபெருமானுக்குப் பூசனைகளெல்லாம் முறையாகச் செய்து எம்பெருமான் திருவடிநீழல் எய்தினர்.

திருநின்றவூர் என்பது அப்பெயருடை புகை வண்டி நிலையத்தி லிருந்து ஒரு கல் தொலைவில் சென்னைக்கு வடக்கேயுள்ளது. திண்ணனூர் என்று வழங்கப் பெறுவது. அகக்கோயில் கட்டிய அவ் விடத்தே இப்போது புறக்கோயில் ஒன்றும் இருக்கிறது. அக்கோயிலில் பல்லவர்களுடைய சிங்கத்தூண்கள் இருக்கின்றன. சிவலிங்கத்திற் கெதிரே பூசலார் உருவம் இருக்கிறது. அதற்குப் பூசை நடைபெறு கிறது. பூசலார் உருவத்தில் மார்பு பிளந்து இலிங்கம் இருப்பதுபோல் உள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருப்பெயர் மனக்கோயில் கொண்ட நாதர் அல்லது இருதயாலயேசுவரர். தேவியார் திருநாமம் உமையம்மையார்.

இவ்வரலாற்றிற் கூறப்பெற்ற வேந்தர் பெருமான் காஞ்சி கயிலாச நாதர் கோயிலைக் கட்டிய இராசிம்மபல்லவன் (கி.பி. 690-710) என்பர் வரலாற்ருசிரியர். கயிலாயத்தின் அழகினை வென்ற விமானத்தை யுடைய அக்கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு பின் வருமாறு:— "துஷ்யந்தன் முதலான அரசர் ஆகாசவாணியைக் கேட்டாராளுல் ஆச்சரியமில்லை. நற்குணம் பறந்தோடிப்போன கலியுகத்தில் அந்த வாணியை ஸ்ரீபரன் கேட்டது வியப்பைத் தருவதே." ஸ்ரீபரன் இராச சிம்மன் பட்டப்பெயர். அசரீரி கூறிய இந்த நிகழ்ச்சியையே சேக்கிழார் அரசன் கண்ட கனவாகக் கூறினர் என்பர் வரலாற்றுப் பேராசிரியரான பி. தி. சீனிவாசய்யங்கார்.

திருநின்றவூரில் ஒரு திருமால் கோயிலும் உள்ளது. ஊர்ப் பக்கங் களிலெல்லாம் சிவலிங்கங்கள் காட்சியளிக்கின்றன.

"மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப்பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்"

—சுந்தரர் திருத்தொண்டத் தொகை.

28-10-73 அன்று வரும் பூசலார் நாயனர் திருநட்சத்திரத்தை யொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது.



ஆதிக்கக் கொள்கையும் சுந்தரர் வழக்கும்

[வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்.,]

முன்னுரை :

அறிவாராய்ச்சியியலில் ஆதிக்கக் கொள்கை எத்தகைய சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை முன் இதழ்க் கட்டுரையிற் கண்டோம். ஆதிக்கக் கொள்கையானது மதிப்பு மிக்கார் ஆதரவு, பெரும்பான்மையினர் ஆதரவு காலநீடிப்பு, தகுதி என்ற நான்கனுள் ஏதேனும் ஒன்றைத் துணையாகப் பற்றி உண்மையை அறியத் துணை செய்தது என்பதையும் கண்டோம். உண்மையை அறிய ஆதிக்கக் கொள்கை எந்த வகையில் துணை செய்தது என்பதை, சுந்தரர் வழக்கு மூலமாகவும் நாம் உணரலாம். பெரியபுராண ஆசிரியர் சோழ அரசின் முதலமைச்சராக விளங்கியவர். அரசியலறிவும் நீதித்துறை அறிவும் செப்பமுற வாய்க்கப் பெற்ற சீலர், ஆதலின் அவர்தம் வாக்கினைக் கொண்டு ஆதிக்கக் கொள்கை தமிழகத்தில் எவ்வாறு கருதப் பெற்று வந்தது என்பதைத் தெளிவுற அறியலாம். அதைத் தெளிவுறுத்து வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சுந்தரர் வழக்கு :

சைவ சமய குரவர்களுள் ஒருவராகிய திருநாவலூரர், சுந்தரர் என அழைக்கப்பெறும் சுந்தரம் உடையவர். அவருடைய திருமண நிகழ்ச்சியின் போது ஒரு விந்தையான வழக்கை அந்தணப் பெரியவர் ஒருவர் கொண்டு வருகிறார்.

திருமண மண்டபத்தில் மணமகனாக அமர்ந்திருக்கும் திருநாவலூராருக்கு முன் வந்து நின்ற முதியவர், அங்கே கூடியிருந்த மறையவர்களை நோக்கி, "இந்நாவலூரன் (சுந்தரர்) என் அடியான்; இதுவே நான் மொழியும் வழக்கு" என்று கூறினர். மண்டபத்தில் கூடியிருந்த அனைவரும் நகைத்தனர்.

முதியவர் கொண்டு வந்த வழக்கானது தனிமனிதனைப் பற்றியது. அனைவரும் நகைப்பதற்குக் காரணம் தனிமனிதனைப் பற்றிய ஒன்றற்குப் பொதுமை வடிவு கொடுக்கப் பெறுவதே. பொதுமை வடிவு கொடுக்கப் பெறுவதோடு சாதிப் பின்னணியும் சேர்க்கப் பெறுகிறது.

எனக்கும் உனக்கும் மட்டுமே சம்பந்தமுடையது; நாம் இருவரும் இசைந்து ஒப்புதல் செய்து கொண்டது இவ்வழக்கு என அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார் முதியவர். திருவெண்ணெய் நல்லூர் அவையோர் முன் இதே வழக்கை முதியவர் கூற வேண்டிய நிலை ஏற்படுகிறது. அங்கேயும் "நாவலூர் ஆரூரன் தான் காதல் என் அடியான்" என்றார்.

அவர்களும் நகைக்கின்றனர். முதியவர் அங்கேயும் சொல்கிறார் வழக்கு வந்த முறை எது என்றால் "இசைவு" என்று சுட்டிக் காட்டு கிறார். "இசைவினால் எழுதும் ஓலை" என்றும் கூறுகிறார்.

ஆனால், நாவலூரார் (சுந்தரர்) என்ற தனிமனிதர் முதியவருக்கு அடிமை என்று இவ்வழக்கைக் கேட்ட யாருமே சிந்திக்கவில்லை. எல்லாரும் ஒரே நோக்கமாக மறுத்து நகைத்ததற்குக் காரணம்— "ஒரு அந்தணர் இன்னொரு அந்தணருக்கு அடிமை ஆதல் இல்லை" என்பதே. இந்நிலையிலும் அவையோர் சுந்தரரைப் பார்த்து உன் எண்ணம் என்ன? என்று வினவுகின்றனர். அதற்குச் சுந்தரர் கூறும் விடை சிந்திப்பதற் குரியது.

அவையோரின் சிந்தனைக்கு இரண்டு செய்திகளை வைக்கிறார். அனைத்து நூல் உணர்ந்தீர்; ஆதிசைவன் என்று அறிவீர், என்பன. என் பிறப்பு ஆதிசைவக்குலம். ஆதிசைவன் வேறோர் அந்தணனுக்கு அடிமை ஆதல் என்பது எந்த நூலிலும் காணாத வழக்கு. உலக வழக்கையோ நூல் வழக்கையோ ஆதாரமாகக் கொண்டு ஆராய முற்பட்டால் இது பொய் வழக்கே என்று சுந்தரர் எடுத்துக் காட்டுகிறார். கேட்ட அவையோர்கள் கூறுவது மேலும் வியப்பைத் தருகிறது.

"இவ்வுலகத்தில் இன்று நீர் இவரை நும் அடிமை என்ற வெவ்வுரையை எம்முன்பு (அவையோர் முன்பு) நிலைநாட்ட வேண்டும்" என்று கூறுகின்றார்கள்.

முதியவரே! நீர் கூறும் வழக்கு இவ்வுலகத்துக்குப் பொருந்தாது; ஒருவேளை நீண்ட காலத்துக்கு முன் இத்தகைய வழக்கம் இருந்திருக்க லாம், ஆனால் இன்றைக்கு இவ்வழக்கம் இல்லை என்றனர். இவ்வுலகம், இன்று, இவரை என்ற அண்மைச் சுட்டுக்கள் பொருட் பொதிவுடையன.

திருவெண்ணெய் நல்லூர் அவையினர் கூறிய கருத்தை நோக்கும் போது, ஆதிக்கக் கொள்கைக்கு மிகுதியும் வலிமையை ஊட்டுகின்ற 'கால நீடிப்பு' என்ற அடிப்படையை அவையினர் முழுமையாக ஆதரிக் கின்றனர் எனக் கொள்ளலாம். நீர் சொல்லும் வழக்கம் ஒருகாலத்தில் இருந்திருக்கலாம்; இன்றைக்கு இல்லை என மறுக்கின்றனர். இது பொதுப் பொருள்.

சான்றுகள் மூன்று

உண்மையை நிலைநாட்டுவதற்கு உரிமையுடைய சான்றுகள் மூன்று என அமைத்துக் காட்டுகிறார் சேக்கிழார். திருவெண்ணெய் நல்லூர் அவையினர் கூற்றாக அமைக்கும் சேக்கிழார் ஆட்சி, ஆவணம், அயலார் தங்கள் காட்சி என்ற மூன்றைச் சான்றுகளாக அமைக்கிறார்கள்.

இந்நாளிற் கண்ணாற் கண்டதாகக் கூறப்பெறும் சாட்சிக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் சேக்கிழார் காலத்தில் இல்லை. ஆட்சிக் கொள்கையையே ஆட்சி என குறிக்கிறார் சேக்கிழார். சுந்தரர் வரலாற் றில் வழக்கை வெல்லுதற்கு வந்த முதியவர் ஆட்சி, காட்சி என்ற இரண்டையும் துணைக் கொள்ளாமல் ஆவணத்தை மட்டுமே துணைக் கொண்டு வழக்காடினார். வந்தவர் பழைய மன்றாடி ஆகையால் வெல்லு தல் எளிதாயிற்றுப் போலும்.

சேக்கிழார் காட்டும் ஆட்சிக் கொள்கை :

சுந்தரர் வழக்குக்கு ஆதாரம் ஆட்சிக் கொள்கை. முதியவர் வழக்குக்கு ஆதாரம் ஆவணம். இருவர் வழக்குக்கும் பொருந்த வாராதது காட்சி.

ஆட்சிக் கொள்கையானது உண்மையை நிலைநாட்டுவதற்குச் சிறந்த சான்றுதான் என்றாலும் ஆட்சிக்கொள்கையும் சில இடங்களில் வலிவற்றுப் போகும் என்பதைச் சேக்கிழார் சுட்டிக் காட்டுகிறார்; சில பழக்க வழக்கங்கள் ஆட்சியில் இருக்கின்ற காரணத்தால்—எல்லாராலுமே ஒப்புக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் அவைகளை மீறக் கூடாது என்ற வரையறை இல்லை என்று தெளிவுறுத்திக் காட்டுகிறார் சேக்கிழார். 'இசைவு' என்ற கோடாரியால் ஆட்சிக் கொள்கையின் வலிமையைத் தகர்த்துவிட முடியும் என்று கருதுகிறார். 'அந்தணர் அந்தணர்க்கு அடிமையாதல் இல்லை' என்ற வழக்கம் ஆட்சிக் கொள்கையால் வலியுறுத்தப் பெறுகிறது.

சமூகத்தில் மதிப்பு மிக்கார் ஆதரவு, பெரும்பாலோர் ஆதரவு, கால நீடிப்பு, தகுதி என்ற நான்கன் அடிப்படையில் உண்மையை நிலைநாட்டும் ஆதிக்கக் கொள்கையைச் சேக்கிழார் மிகவும் செம்மையாகச் சித்தரிக்கிறார்.

இவ்வுலகில் என்ற சுட்டுச் சொல்லின் பொருள் மதிப்பு மிக்கார் ஆதரவு என்ற முறையிலோ, பெரும்பாலோர் ஆதரவு என்ற முறையிலோ இக்கொள்கையை நிலைநாட்ட முடியாது என்று வரையறை செய்கிறார் சேக்கிழார்.

இன்று என்ற சுட்டுச் சொல்லின் பொருள் நீண்ட காலத்துக்கு முன்னிருந்தாலும் இன்றுவரை அக்கருத்து நீடித்து நின்று தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை என்று காலநீடிப்புக் காரணத்தாலும் நிலைநாட்ட முடியாது என்று முடிவு கட்டுகிறார் சேக்கிழார்.

இவரை என்று சுந்தரரைச் சுட்டிச் சொல்லுவதன் நோக்கம் ஒன்றுண்டு. ஆதிசைவராகப் பிறந்து, அனைத்து நூல் உணர்ந்த தகுதி மட்டுமன்று. சுந்தரருக்கு அரசரால் வளர்க்கப் பெற்ற பெருமையும் உண்டு. அரசியல் திருவும், நீதியை நிலைநாட்டும் அறமுறைகளை அரசருடன் உடனிருந்து ஆய்ந்து முடிவெடுக்கக் கூடிய வாய்ப்பையும் பெற்று வளர்ந்தவர். உலகியல் நெறிமுறைகளை அறநெறி வழுவாது உணர்ந்து சொல்லும் தகுதி உடையவர் ஆகையால் இவரை அடிமையாக்கிக் கொள்ளவேண்டும் என்று நீ கூறிய உரை வெவ்வுரை என்றனர். இதனால் தகுதி என்ற அடிப்படையில் ஆட்சிக் கொள்கையை நிலைநாட்டவும் முடியாது என்று தெளிவுறுத்தி விடுகிறார் சேக்கிழாரடிகள்.

ஆவணக் கொள்கையும் சேக்கிழாரும் :

ஆட்சிக் கொள்கையை ஒட்டி வருவதே ஆவணக் கொள்கை. சுந்தரர் வழக்கில் சேக்கிழார் குறிப்பிடும் ஆவணக் கொள்கையைச் சிறிதே நோக்குதல் வேண்டும். ஆவணக் கொள்கை என்ற வகையில் ஓர் ஓலையைக் கொண்டு வந்து காட்டிவிட்டால் அதை உண்மை என்று ஒத்துக் கொண்டு விட முடியுமா? என்ற ஐயம் நீதி துறைக்கு எப்போதும் உண்டு.

உலகில் ஒருவர் மற்றவரிடம் கடன் வாங்குதல் வீடு விற்றல் போன்றவைகளுக்கு எழுதிக் கொடுத்த சீட்டுப் பொருந்துவதாகும் 'அந்தணர் வேறு ஓர் அந்தணர்க்கு அடிமை' என்ற செயல் இசைவினல் நேர்ந்ததாயினும் சரி, இருமையால் நேர்ந்ததாயினும் சரி, வழக்கைத் தொடுப்பவர் வைத்திருக்கும் ஓலையை அடிப்படையாகக் கொண்டே அது உண்மை என முடிவு செய்து விடமுடியுமா?

சுந்தரரின் பாட்டானுர் எழுத்து, மேல் கையெழுத்திட்டவர்கள் எழுத்து ஆகிய எழுத்துக்கள் உண்மையான எழுத்துக்களா? என்று ஒப்பு நோக்கிப் பார்த்துவிட்டால் ஆவணம் உண்மையை நிலைநாட்டும் என்று கருதி 'எழுத்தொப்புமை' என்ற வாதத்தை மெல்லத் துவக்கு கிருர் சேக்கிழார்.

முதியவர் கொண்டு வந்த ஆவணத்தில் உள்ள எழுத்து, என் பாட்டனுர் கையெழுத்துப் போல இருக்கலாம். ஆனல் இது உண்மைக் கையெழுத்தன்று என்று சுந்தரர் மறுக்கலாம்.

சேக்கிழார் பெருமான் நீதித்துறையின் ஒழுங்கை நிலைநாட்டுவதற் காக நம்மை அன்புடன் அழைத்துச் சென்று, மாபெரும் உண்மையை விளக்குகிருர்.

"ஓலை, அரண் தரு காப்பில் வேறுென்று அழைத்து உடன் ஒப்பு நோக்கி
இரண்டும் ஒத்திருந்தது என்னே! இனிச் செயல் இல்லை"

என்ருர். இது அவையோர் செயல்.

சுந்தரரின் பாட்டனுர் கையெழுத்து உடைய ஓலை, மேல் கையெழுத் திட்டவர்கள் கையெழுத்துடைய ஓலைகள் பலவற்றைச் சோதித்து எடுத்திருக்க வேண்டும். சுந்தரரின் பாட்டனுர் கையெழுத்திட்ட ஓலை ஆவணக் களரியில் அதுவும் திருவெண்ணெய் நல்லூர் ஆவணக் களரி யில் இருக்க வேண்டிய அவசியம் ஏது? வந்த முதியவரின் சொந்த ஊர் திருவெண்ணெய் நல்லூராக இருந்ததால் இந்த வழக்குத் திருவெண் ணெய் நல்லூர் அவைக்கு வந்தது. இல்லையேல் இது திருநாவலூரி லேயே முடிந்திருக்க வேண்டியதுதானே! திருநாவலூரில் வாழ்ந்த சுந்தரரின் பாட்டனுர் கையெழுத்திட்ட ஓலை, சுந்தரர் வழக்கு வருவதற்கு முன்னமேயே, திருவெண்ணெய்நல்லூர் ஆவணக்களரியில், பாதுகாப் பாக வைக்கப்பெற்ற ஓலைக்கட்டில் இருக்க வேண்டிய காரணம் என்ன? சுந்தரரின் பாட்டனுர் திருவெண்ணெய்நல்லூர் அவைக்கு, முன்ன மேயே வழக்கு நிமித்தம் வந்து நின்றவராக ஏதும் வரலாறு இருந்திருக்குமா? உண்மை என்ன?

உலகியல் வழக்கத்திற்கு ஒவ்வாத சில உடன்படிக்கைகள் இசைவு காரணமாக ஏற்படலாம். ஆனல் அவை பொதுமன்றத்திற்கு வந்திருக்க வேண்டும். இக்காலத்தே பதிவு செய்து வைத்தல் போல அக்காலத் திலும் பதிவு முறை இருந்தது. உலகியலுக்கு மாறுபட நடைபெற்ற புதுமை வழக்குக்கள் அரண் தரு காப்பில் பதிவுமுறை ஆவணமாக அமைக்கப் பெறல் வேண்டும். ஏனெனில் உடன்படிக்கை செய்து கொண்டவர்களுக்குள் தகராறு வரும் என்பதற்காக அன்று. இத்தகைய வழக்குகளுக்குரிய ஆவணங்கள் சாதாரணமானவை அல்ல; ஆட்சிக் கொள்கையைத் தகர்க்கும் அணு ஆயுதங்கள். இவைகள் மூலம் புதுமை யாகத் தோன்றும் சில வழக்குகளுக்கும் விளக்கம் சொல்லி நீதி கூற முடியும் என்பதற்காகப் பாதுகாப்பதுண்டு.

எடுத்துக் காட்டாக, காலமல்லாத காலத்தில் பெய்த மழையால் ஆற்றில் வெள்ளம் பெருகிற்று. அவ்வெள்ளத்தில் சில எருமைகள் அகப்பட்டு இறந்து போயின, இறந்த எருமைகள் ஓர் ஊர்க் கரையில் ஒதுங்கின. அழுகி நாற்றமெடுத்ததால் அவ்வெருமைகளை அப்புறப் படுத்தும் பணி யாருக்கு உரிமையானது? என்ற கேள்வி அவ்வூரில் எழுந்தது. அப்பொழுது அவ்வூரில் உள்ளவர்கள், இவ்வூர்க் கணக்கப் பிள்ளையிடம் 'அடங்கல் பத்திரங்கள்' இருக்கும். அவற்றைப் பார்த்தால் இந்தப் பணி யாருடையது? என்ற வினவுக்கு விடை கிடைக்கும் என்றார்கள்.

எருமை இறந்து ஊரில் ஒதுங்குதல் புதுமையே. இவ்வாறே முன்ன ரும் நடைபெற்றிருக்குமா? இதற்கு விடை என்ன? எருமை இறந்து ஒதுங்குதல் நடைபெறவில்லையென்றாலும், இதை ஒத்த அல்லது சிறிது ஒப்புமையுடைய வேறு நிகழ்ச்சிகள் அமைய, அப்போதிருந்தவர்கள் என்ன முடிவெடுத்தார்கள் என்பதை அறிந்து அவ்வாறே இப்போதும் செய்யலாம் என்பதே.

ஆனால் அந்த ஊர்க் கணக்கப்பிள்ளை செய்தது வேறு. ஊர்க் கணக்குப்பிள்ளைக்கு அவ்வூர்க் குயவன் கையூட்டுக்காசு கொடுக்கவில்லை. அந்த வஞ்சத்தை அவர் தீர்த்துக் கொண்டார். பழைய ஓலை நறுக்கு ஒன்றை எடுத்து,

"காட்டு எருமுட்டை பொறுக்கி
மட்கலம் சுட்ட புகையால்
கால மல்லாத காலத்தில் மன்னிய
கோல மேகம் கறுத்து மின்னி
இடித்துப் பெய்த மழை தன்னால்
தடித்துப் பெருகிய வெள்ளம் பட்டு
இறந்து ஒதுங்கிய எருமை தன்னை
ஈர்த்துக் கரை சேர்த்தல்
இவ்வூர்க் குயவர்க்கு என்றுங் கடனே"

என எழுதி அடங்கலில் சேர்த்து விட்டார். ஊரார் வந்து கேட்டபோது அதைப் படித்து, உறுதி செய்துவிட்டார், பணி குயவனுக்காயிற்று.

எனவே, ஆவணக் காப்பு நிலையத்தில் சில புதுமையுடைய வழக்குக் கள் பதியப் பெற்றிருக்க வேண்டும், என்பன இதனால் தெரியலாம்.

சுந்தரர் வழக்கில் கையெழுத்தை ஒத்துப் பார்த்தல் என்ற வகையில் வழக்கைச் சேக்கிழார் நீட்டுவதன் காரணமே, இத்தகைய வழக்கு இந்த ஆவணக் களரியில் காப்பிட்டு வைக்கப் பெற்றிருத்தல் வேண்டுமே! என்ற அரசியலறிவுதான்.

ஏடுகளைப் புரட்டும்போது, சுந்தரர் வழக்குக்காக வந்த ஓலைபோல ஓர் ஓலை ஆவணக் காப்பினுள் இருந்ததுதான், அவையோர்களை "இனிக செயல் இல்லை" என்று விரைந்து முடிவு செய்வதற்குரிய காரணமாச் இருந்தது எனக் கொள்ளவேண்டும். இந்த முடிவை நாம் கொள்ள வில்லையானால், சுந்தரரின் பாட்டனார் கையெழுத்தும், மேல் கையெழுத் திட்டவர்களின் கையெழுத்தும் உள்ள ஓலைகள் திருவெண்ணெய் நல்லூர் ஆவணக்களரியில் இருப்பதற்கு நியாயம் இல்லை என்ற கருத்தே வலியுறும்.

எனவே, ஆட்சிக் கொள்கையை 'இசைவு' என்ற காரணத்தால் ஒரு ஆவணம் காட்டி வெல்லுதல் எளிதன்று என்பதைச் சேக்கிழார் நீதித் துறையின் சார்பில் நின்று மக்களுக்கு எடுத்துக் காட்டும் உண்மையாகும்.

முடிப்புரை :

தமிழகத்தைப் பொறுத்த வரையில் உண்மையை நிலை நாட்டுவதற் குரிய சான்றுகளில் ஆதிக்கக் கொள்கை அல்லது ஆட்சிக் கொள்கை முக்கிய இடம் பெற்றிருந்தது என்பதைச் சுந்தரர் வரலாற்றால் அறிகிறோம். ஆட்சிக் கொள்கையானது நான்கு அடிப்படைகளில் வலி வுடையதாகத் திகழும் என்பதையும் சேக்கிழாரடிகள் உடன்படுகிறார். ஆட்சிக் கொள்கையை எதிர்க்கும் ஆற்றல் 'இசைவு'க்கு உண்டு; எனினும் இசைவுக்கு ஆவணச் சான்று இருக்க வேண்டும். ஆவணக் காப்பு நிலையத்தில் ஆட்சிக் கொள்கையை அழிக்கும் வழக்குப் பத்திரங்கள் அல்லது இசைவுப் பத்திரங்கள் பாதுகாத்து வைக்கப் பெறுதல் வேண்டும் என்ற நியதி இருந்தது என்பதையும் அறியலாம்.

சுருங்கக் கூறின், அறிவாராய்ச்சியியலில் உண்மையை நிலைநாட்டப் பணிபுரியும் கொள்கைகளுள் ஒன்று எனக் கருதப்பெற்ற ஆட்சிக் கொள்கைக்குத் தமிழகத்தில் மிக்க வலிமை இருந்தது என்பதைச் சுந்தரர் வரலாற்றால் அறியலாம்.

இராசராசனின் இறைபணிகள்

திரு. கே. ஸ்ரீதரன், எம்.ஏ.,

பண்டைக் காலத்தில் தமிழகம் முப்பெரும் பிரிவுகளாக பிரிந்து இருந்தது. அதை ஆண்ட மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் என அழைக்கப்பட்டனர்.

“ தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே ”

என ஔவையார் சோழர்களைப் பற்றி சிறப்பித்துப் பாடினார். இத்தகைய சிறப்பு வாய்ந்த சோழவம்சத்தில் பிறந்த மாமன்னனே முதலாம் இராசராசன் ஆவான். இவன் இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரசோழனுக்கும் வானவன்மாதேவிக்கும் பிறந்த மைந்தன். இவனுடைய இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பதாகும்.

தமிழகத்தை ஆண்ட மன்னர்களுள் இவன் மிகவும் புகழ்பெற்றவன். இவனுக்குப் பல சிறப்பு பெயர்கள் உண்டு. அவையாவன:—கேரளாந்தகன், சிங்களாந்தகன், பாண்டியகுலாசனி, தெலிங்க குலகாலன், மும்முடிச்சோழன், செயங்கொண்ட சோழன், சிவபாதசேகரன், பண்டித சோழன், திருமுறைகண்ட சோழன், சத்திரிய சிகாமணி, ராஜாஸ்ரயன் முதலியனவாகும். மேலும் திருக்கோவலூர் கல்வெட்டு ‘செந்திரு மடந்தை மண் ஸ்ரீ ராசராசன், இந்திர சமானன், இராசசர்வக்ஞன் என்னும் புலி ’ எனப் புகழ்கிறது. இவனுடைய காலத்தில் தமிழகம் இணையற்ற சிறப்பு வாய்ந்து விளங்கியது. தமிழகத்தின் சிறப்பைக் கடல் கடந்த நாடுகளிலும் பரவச் செய்தான். நாடு போற்றும் ஆட்சித்திறன் உடையவன். சிற்பம், ஓவியம், நடனம் போன்ற கவின் கலைகளையும் ஆதரித்து வளம் பெறச் செய்தான். அவன் தன்னை ஆட்கொண்ட இறைவனுக்கு செய்த இறைபணிகளைப் பற்றி மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

கோயிலின் சிறப்பு :

சிவபாதசேகரனான இராசராசன், தமிழர் கட்டிடக் கலையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலை எடுப்பித்தான். தன் 19-ஆம் ஆட்சியாண்டில் தொடங்கி 26-ஆம் ஆட்சியாண்டில் கட்டி முடித்தான். அவன் இக்கோயிலைக் கட்டியதை :

‘ பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து
தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீராசராசேச்சுவரம்
இதற்கு நாம் கொடுத்தனவும் நம் அக்கன் கொடுத்தனவும்
நம் பெண்டுகள் கொடுத்தனவும் கல்லில் வெட்டுக ’

என்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம். கோயில் மூன்று திருவாயில்களை உடையது. அவற்றின் பெயர் கேரளாந்தகன் திருவாயில், இராசராசன் திருவாயில், திருவணுக்கன் திருவாயில் என்பன. இறைவனுக்கு எதிரில் உள்ள நந்தி ஒரே கல்லால் ஆனது. விமானம் தட்சிணமேரு என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. விமானத்தின் தூபியில் செப்புக்குடம் வைக்க இராசராசன் தானமளித்ததை கீழ்க் காணும் கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.

'யாண்டு இருபத்தைஞ்சாவது, நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினல் உடையார், ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீ ராஜராஜீச்வர முடையார் ஸ்ரீ விமாநத்துச் செம்பின் ஸ்தூபித் தறியில் வைக்கக் குடுத்த செப்புக்குடம் ஒன்று நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கிந தகடுபல பொன் ஆடவல்லானென்னுங் கல்லால்நிறை இரண்டாயிரத்துத் தொளாயிரத்து இருபத்தறு கழஞ்சரை'

கருவறையைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. விமானத்தின் பக்கச் சுவர்களில் பிள்ளையார், பிட்சாடனர், நடராசர், இலிங்கோற்பவர், அர்த்தநாரீசுவரர், கலயாணசுந்தரர் ஆகிய திருவுருவங்கள் உள்ளன. கோயிலின் இரண்டாம் தளத்து உட்பாகத்தின் அடிவரிசையில் நடன சிற்பங்கள் உள்ளன. கோயிலில் வீற்றிருக்கும் பெருமானுக்கு இராசராசேசுவரர், தட்சிணமேரு விடங்கர், பிரகதீசுவரர் பெருவுடையார் என்ற பெயர்கள் உண்டு. இராசராசனின் குருவான கருவூர்த்தேவர் இக்கோயிலைப் பற்றித் தம் திருவிசைப்பாத் திருப்பதிகத்தில் புகழ்ந்து பாடியுள்ளார்.

உலகெலாந் தொழவந்தெழ கதிர்ப்பரிதி
    ஒன்று நூருயிரங் கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்பச்சோ
    அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
    பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
    இராசராசேச்சரத் திவர்க்கே.

இதுமட்டுமல்லாமல் வேறு பல கோயில்களையும் கட்டியுள்ளான். பல கோயில்களுக்கு நிலமளித்ததை பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இலங்கையில் தன் தாயின் நினைவாகப் பொல்லனருவா என்ற இடத்தில் வானவன்மாதேவிச்சுரம் என்ற கோயிலைக் கட்டினான். வடஆற்காடு மாவட்டத்தில் தன் பாட்டனர் நினைவாக அரிஞ்சயேச்சுரம் என்ற கோயிலைக் கட்டினான்.

இவன் சைவசமயத்தைப் போற்றியதுபோல் மற்ற மதங்களையும் போற்றினான். நாகப்பட்டினத்தில் சூடாமணிவிகாரம் கட்ட அனுமதி தந்து அதற்குப் பல கிராமங்களைத் தானமாகவும் அளித்தான்.

கோயிலின் ஊழியர்கள் :

கோயில் காரியங்களைச் செய்ய, பண்டாரகர், கணக்கர், பரிசாரகர், மாலை தொடுப்போர், திருவிளக்கிடுவார், தச்சன், தட்டான், கன்னான் குயவன், நாவிதன், வண்ணான் ஆகிய தொழிலாளர்களை நியமித்து அவர்கள் சம்பளத்திற்காக நிலம் தானமளித்தான் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மேலும் கோயிற் பணிகளைச் செய்ய இசையிலும், நடனத்திலும் வல்ல 400 தளிச்சேரிப்பெண்டுகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் கோயிலின் அருகே தனித்தனி வீடுகளில் குடியேற்றப்பட்டனர். ஒவ்வொருவரின் பெயரையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இசை சொல்லித்தரும் காந்தர்வர்கள் 70 பேர் இருந்தனர். அத்துடன் கொட்டி

மத்தளக்காரர், பக்க வாத்தியக்காரர், வீணைவாசிப்போர் மற்றும் உடுக்கை, வங்கியம், பாடவியம், முத்திரைச்சங்கு முதலிய இசைக் கருவிகள் வாசிப்போரும், உவச்சு, சகடை பேன்ற பறைகளைக் கொட்டு வோரும் இராசராசனல் நியமிக்கப்பட்டனர்.

கோயிலில் வழிபாடு :

கோயிலில் தினசரி வழிபாட்டுக்கும், இறைவனுக்கு படைக்கத் திருவமுதுக்கும் நிபந்தங்கள் அளித்தான் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

கோயிலில் மூன்று வேளைகளிலும் அபிடேகம் செய்யத் தானம் அளித்ததை,

> 'ஸ்ரீ இராஜராஜீச்வரமுடையார் ஆடியருளத் திருமஞ்சனநீரும்
> தண்ணீர் மீதிலுமிட பெருஞ் சண்பக மொட்டுக்கும்,
> ஏலவரிசிக்கும், இலாமச்சத்திற்கும்'

என்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம். இதைத் தவிர நெய்யமுது, அப்பக் காய்கறியமுது, புளியங்கறியமுது முதலிய திருவமுதுகள் இறைவனுக்குப் படைக்கப்பட்டது. தென் ஆர்க்காடு மாவட்டம் திருவா மாத்தூர் கோயில் கல்வெட்டில் இராசராசன் இறைவனுக்குத் தினசரி 'அக்கார அடிசில்' (இனிப்புக் கலந்த சோறு) படைக்க நிலமளித்ததாக செய்தி கூறப்படுகின்றது.

இராசராசன் தஞ்சைக் கோயிலில் வீற்றிருக்கும் கணபதிக்கு வாழைப் பழம் அமுது செய்தருள, தினம் வாழைப்பழம் நூற்றைம்பதாக; ஒரு ஆண்டுக்கு வந்த வாழைப்பழம் ஐம்பத்து நாலாயிரத்துக்கு; காசு ஒன்றுக்கு வாழைப்பழம் ஆயிரத்திருநூருக; வந்த காசு நாற்பத்து ஐஞ்சுக்கு; காசு ஒன்றுக்கு ஆட்டை வட்டம் அரைக்காற்காசு பொலிசை யூட்டாக (வட்டியாக); சந்திராதித்தவத் செல்ல வைத்த காசு முன்னூற்று அறுபது, கொடுத்ததாக கோயில் மேலைத் திருச்சுற்றில் உள்ள கல்வெட்டுக் கூறுகின்றது.

கோயிலுக்கு அளித்த கொடைகள் :

இராசராசன் தஞ்சைக் கோயிலுக்கு நகைகள் மற்றும் பொன், வெள்ளி யால் செய்த கலங்களை அளித்தான். நகைகள் தங்கம், வைரம், மாணிக்கம், பவழம், முத்து ஆகியவை கொண்டு செய்யப்பட்டன. ஒவ்வொரு நகையின் எடையும், அதில் உள்ள முத்துக்கள், பவழங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையையும், தரத்தையும் பற்றி விளக்கமாக கல்வெட்டுகளிலில் கூறப்படுகின்றன. அவ்வாறு கொடுக்கப்பட்டுள்ள திருவாபரணங்களின் பெயர்கள் வருமாறு:—மோதிரம், பொற்பூ, திருப்பட்டிகை, திருக்கைக்காரை, திருமாலை, திருசந்தம், திருமுடி, புல்லிகை கண்ட நாண், ஸ்ரீ பாஹீவலயம், பதக்கம், வடத்திருவடி நிலை, இடத்திருவடி நிலை, ரத்நவளை, ரத்நகடகம், நவரத்ன மோதிரம், வயிர உழுத்து, திரள் மணிவடம், முத்துவளை, முத்தின் உழுத்து, மாணிக்கத் தின் உழுத்து ஆகியவையாகும்.

பொற்கலன்கள்:—தளிகை, மண்டை, கெண்டி, தட்டம், கிடாரம் ஒட்டு வட்டில், கலசம், படிக்கம், குறுமடல், மாநவட்டில், இலைத்தட்டு, குடம், கறண்டிகைச் செப்பு, இலைச்செப்பு, கலசப்பானை, தாமரைத்தாள், திருப்பள்ளித் தொங்கல் மகுடம், திருக்கொற்றக்குடை ஆகியவை.

வெள்ளியால் செய்தவை :—காளம், தளிகை, குடம், கலசப்பானை, மூக்கு வட்டகை, வட்டில், பிங்காளம், சட்டுவம், நெடுமடல், குறுமடல், இலைத்தட்டு ஆகியவையாகும்.

செப்புத் திருமேனிகள் :

இராசராசன் தஞ்சைக் கோயிலுக்குச் செப்புத் திருமேனிகளைச் செய் வித்து எழுந்தருளுவித்தான். அவைகள் எவ்வாறு செய்யப்பட்டன என்பது பற்றியும், என்னென்ன திருமேனிகள் கொடுத்தான் என்பது பற்றியும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

"பாதாதி கேசாந்தம் இருபதிற்று விரலே நாலு தோரை உசரத்து
நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த
சண்டேச்வர பிரசாத தேவர் ஒன்று"

என்று கூறுகிறது. இதைத் தவிர உமாபரமேச்வரியார், மகாதேவர், பஞ்சதேகமூர்த்திகள், சுப்பிரமணியர், தட்சிணமூர்த்தி, திருமால், சேத்திர பால தேவர் ஆகிய திருமேனிகளைத் தஞ்சைக் கோயிலில் எழுந்தருளுவித்தார்.

இராசராசன் காலத்தில் எடை, அளவுகளுக்கு இறைவன் பெயர் இடப் பட்டிருந்ததாக கல்வெட்டுக்களால் தெரியவருகின்றது. நகைகளை எடை போடுவதற்கு தட்சிணமேரு விடங்கர் என்ற கல்லும், நெல்லை அளப்ப தற்கு ஆடவல்லான் என்ற மரக்காலும் உபயோகப் படுத்தப்பட்டது.

திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் :

தில்லையில் மறைந்து கிடந்த திருமுறைகளை வெளிக் கொணர்ந்து, நம்பியாண்டார் நம்பியின் உதவியுடன் அதைத் தொகுத்து வெளியிட் டான். இது இவன் தமிழுக்கு செய்த மாபெரும் தொண்டு ஆகும்.

அதனல் அவனுக்குத் திருமுறை கண்ட சோழன் என்ற சிறப்பு பெயர் வந்தது. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நாள்தோறும் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய 48 பேர் இருந்தனர். இவர்களுடன் உடுக்கை வாசிப்பவன் ஒருவனும், கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் இருந்தனர். திருப்பதியம் விண்ணப்பம் செய்பவர்களின் பெயர்களைக் கல்வெட்டில் குறித்துள்ளான். இவர்களுக்கு நெல் சம்பளமாக கொடுக்கப்பட்டது. இவர்களை மேற்பார்வையிட 'தேவாரநாயகம்' என்ற அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

விழாக்கள் :

தஞ்சைக் கோயிலில் கார்த்திகைத் தீபவிழா, வைகாசித் திருவிழா, வசந்த விழா, திருவாதிரை ஆகிய விழாக்கள் சிறப்பாக நடத்தப்பட்டன. வைகாசித் திருவிழாவில் 'இராசராசேசுவரம்' என்ற நாடகம் நடத்தப் பெற்றது.

பண்டித சோழனுன இராசராசன், ஐப்பசி மாதம் சதய நாளில் பிறந் தான். தன் பிறந்த நாளை, சதய நாள் விழாவாக ஐப்பசி மாதத்தில் கோயில்களில் சிறப்பாகக் கொண்டாட நிபந்தங்கள் அளித்தான். இச் செய்தியை திருவாலங்காட்டுச் செப்பேடும், பல கோயில் கல்வெட்டுக் களும் அழகாகக் கூறுகின்றன. இத்தகைய புகழ்வாய்ந்த மாமன்னன், சிவபாதசேகரன், திருமுறை கண்ட சோழன் ஆகிய ஸ்ரீ இராசராசனை போற்றி வணங்குவோமாக.

கந்தர் சஷ்டி

[மயிலைவாணன்]

நம் நாட்டில் மக்கள் பல விரதங்களை மேற் கொள்ளுகின்றனர். சைவர்கள் முக்கியமாக விநாயக சதுர்த்தி, நவராத்திரி, சஷ்டி, சிவராத்திரி இவைகளை அனுஷ்டிக்கின்றனர். இவை முறையே கணபதி, அம்பிகை, முருகன், சிவபெருமான் இவைபற்றிச் செய்யப் பெறுவன. இந்த நாட்களில் சிவன் கோயில்களில் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. முருகனைக் குறித்து இயற்றும் விரதங்கள் மூன்று வகையானவை அவை வாரவிரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் என்பன. வெள்ளிக்கிழமை தோறும் மேற்கொள்ளுவது வாரவிரதம்; மாதக் கிருத்திகையில் அனுஷ்டிப்பது நட்சத்திர விரதம்; ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் வரும் சஷ்டியில் வருவது திதி விரதம். அன்று தான் முருகப் பெருமான் சூரபன்மனை அழித்தநாள்.

ஐப்பசி மாதம் வளர்பிறைச் சஷ்டியைக் கடைசி நாளாகக் கொண்டு ஆறு நாட்கள் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இந்த நாளில் தான் விழா நடத்த வேண்டுமென்பது ஸ்கந்தோத்சவ விதிப்படலத்திலும், கௌசிகப்பிரச்ன குமாரதந்திரத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

சைவர்கள் பொதுவாக ஒவ்வொரு மாதத்திலும் வளர்பிறைச் சஷ்டி யில் உபவாசமிருக்கின்றனர். சிறப்பாக ஐப்பசி மாதம் கந்த சஷ்டியின் போது ஆறு நாட்கள் உணவருந்தாதிருந்து விரதத்தை முடிக்கின்றனர். இந்த ஆறு நாட்களிலும் முருகன் புகழ் நூல்களான திருமுருகாற்றுப் படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் சஷ்டிக் கவசம் முதலியவற்றை ஆசாரத்துடன் ஓதி வரும் பழக்கம் நம் நாட்டில் இருந்து வருகிறது. இவையன்றி, கந்தபுராணம், கந்த புராணச் சுருக்கம் முதலியவற்றைப் பெரியோர்களைக் கொண்டு படிக்கக் கேட்டும், அல்லது தாமே படித்தும் விரதநாட்களைப் பயன்படுத்துவர். மேற் சொன்ன எல்லா வகையான விரத நாட்களிலும் மக்கள் காலைக் கடன்களை முடித்து, நீராடித் தூய்மை செய்து கொண்டு, திருக்கோயில் சென்று முருகப்பெருமானை வழிபட்டால் இம்மையில் எல்லா நலன்களை யும் பெற்று மறுமையில் பேரானந்தப் பெருவாழ்வை அடைவார்கள் என்று கந்தபுராணம் கூறுகிறது.

ஒருவர், புலவர் ஒருவரைப் பார்த்து குடம், சட்டி என்ற சொற்களை வைத்து ஒரு பாடல் பாடச் சொன்னார். முருகன் தொண்டரான புலவர், "குக்குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே" என்று முடியும் செய்யுளைச் சொன்னார். குக்குடம்-கோழி, கோழிக் கொடியைப் பிடித்த முருகனைக் குறித்த சஷ்டி விரதத்தை அனுஷ்டித் தால் ஒரு குறையும் வாராது என்பது அதன் பொருள். திருக்குற்றாலக் குறவஞ்சி என்ற நூலில் "ஆறுநாள் கூடி அகப்பட்ட கொக்கு சட்டியில் சாறு செய்தார் வேதப் பிராமணர் சைவர் உண்டார்" என்று கூறப் பெற்றிருக்கிறது. கந்த சஷ்டி ஆறு நாட்கள் விரதமிருந்து மறையவர் களும் சைவர்களும் விழாக் கொண்டாடினர் என்பது பொருள். கொக்கு-மாமரம் (சூரபன்மன்) சட்டி = சஷ்டி. சாறு = விழா.

கந்தபுராணம் நம் சொந்தபுராணம் என்று ஆன்றோர் கூறுவர். நம்மிடத்தேயிருக்கும் சூரபன்மாதியரான ஆணவ கன்ம மாயாமலங் களில் உழன்று அல்லற்படாமல் அவற்றினின்றும் விடுபட்டு வீடு அடைய வேண்டுமென்ற தத்துவத்தையே கந்தபுராணம் உள்ளீடாகக் கொண்டது. எனவே நாம் அனைவரும் கந்தசஷ்டி விரதமிருந்து முருகப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

(1-11-1973 அன்று வருகிற கந்த சஷ்டியையொட்டி இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.)

சிவனடியார் வரலாறு

ஐயடிகள் காடவர்கோன் நாயனர்

—:o:—

தொண்டை நன்னாட்டில், எல்லேயில் கருணைத் தாயாகிய காமாட்சியம்மை, 'தலைவரைத் தழுவ ஆயுநான்மறை போற்ற நின்று அருந்தவம் புரியத் தூய மாதவம் செய்ததாகிய காஞ்சி புரத்தில், பல்லவர்தம் குலமரபின் வழித்தோன்றி, வறுமை யும் பகைமையும் 'மிகையொழியும் வகை அடக்கி' செங் கோலாட்சி செய்து வந்தார் ஐயடிகள் காடவர்கோன் என்பார்.

அனைத்துயிர்களும் இம்மை மறுமையின்பங்களை யடைந் துய்யுமாறு வேண்டி, பிற நாடுகளையும் தம் வசப்படுத்தித், 'தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேல் சைவமுடன் அரு மறையின் துறைவிளங்க' வடநூல் தென்தமிழ் முதலாம் பன்னுகலைப் பணிசெய்யப் பாரளித்து அரசாண்டு வரும் நாளில் "அரசாட்சி இன்னல்" என இகழ்ந்து, தன் எழிற் குமரனை அரசனுக்கித் தம்மை 'நன்மை நெறித் திருத் தொண்டுக்கே' ஆட்படுத்தி அடியவரானர்.

இவ்வாறு தொண்டு செய்து, அண்டர்பிரான் அமர்ந் தருளும் ஆலயங்களான எலாம், கண்டு, இறைஞ்சித், திருத் தொண்டு செய்து, 'வண்டமிழின் மொழி வெண்பா ஒரொன்ரு வழுத்தி, சிதம்பரத்தில் திருச்சிற்றம்பலத்தாடல் புரிந்தருளும் செய்யகடை நிருத்தனர் திருக்கூத்தும் நேர்ந்திறைஞ்சி, விருப்பினுடன் செந்தமிழின் வெண்பா மென்மலர் புனைந்து, அவ்வகையால் அருள்பெற்று அங்குச் சிலநாள் தங்கியிருந்து ஏனைய சிவத்தலங்களுக்கும் சென்று ஏற்ற திருப்பணி செய்து, இன்றமிழ் வெண்பா மொழிந்து, இந்நெறியால் அரனடியார் இன்பமுற இசைந்தபணி பன்னெடுநாள் ஆற்றியபின், கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவரை அடிகளார், பரமர்திருவடி நிழற்கீழ், மன்னு சிவலோகத்து வழி அன்பர் மருங்கணைந்தார்.

—சித்திரபானு.

பிரமாதீச ஆண்டு ஐப்பசித் திங்கள் 15-ஆம் நாள் (31-10-73) புதன் கிழமையன்று, ஐயடிகள் காடவர்கோன் நாயனரின் திருநட்சத்திரமாகிய மூலம் வருகிறது.

திருமூல நாயனுர்

"கொங்குவேள்"

திருக்கயிலாயத்தில் அந்தி இளம்பிறைக் கண்ணி அண்ணலார் ஆலயத்துக்கு முதற்பெருநாயகமாகிய, திருநந்திதேவருடைய திருவருளேப் பெற்ற நான்மறையோகி ஒருவர், அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர். அகத்திய மாமுனிவரிடத்தே பொருந்திய நட்பினுலே அவர் வாழ்கின்ற நற்றமிழின் பொதியமலே நண்ணி, உடன் சிலநாள் உறைவதற்கு எண்ணி, திருக்கயிலேயை விட்டுப் புறப்பட்டு வழியில், திருக்கேதாரம் பசுபதி நேபாளம், காசி, பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு, திருக்கச்சியே கம்பம், திருவதிகை, சிதம்பரம் முதலான தலங்களே வழிபட்டு, காவிரி நீர்ப் பெருந் தீர்த்தம் கலந்தாடிக் கடந்து, ஆவின் அருள் கன்றுறையும் திருவாவடுதுறையை அடைந்து பசுபதியார் செழுங்கோயில் பணிந்தேத்தி வழிபாடு செய்திருந்தார்.

ஒருநாள் திருவாவடுதுறையை விட்டகன்று செல்லும் பொழுது, காவிரியாற்றங்கரையில் பசுக் கூட்டங்கள் அழுது கொண்டிருப்பதைக் கண்டார். சாத்தனூரில், வழிவழியாய் மாடுமேய்த்துக் கொண்டிருக்கும் குலத்தில் தோன்றிய மூலன் என்னும் பெயருடைய ஒருவன், தனியாக வந்து இப்பசுக் கூட்டத்தை மேய்த்துக் கொண்டிருக்கும் போது, அவனது வினேகளெல்லாம் தீரும் படியாக அவன் உயிரைக் கூற்றுவன் கொள்ள, இறந்து நிலத்தில் வீழ்ந்தான்.

இறந்து பட்ட மூலனுடைய உடம்பினே, அவனுல் இத்துணே நாளாக அன்போடு மேய்த்து வளர்க்கப்பெற்ற பசுக்கூட்டம் வந்தணேந்து சுற்றி மிகக் கதறுவன, சுழல்வன, மோந்து பார்ப்பனவாக இருந்தன. இதனேக் கண்ட யோகியானவர், இறைவன் திருவருளால் இப்பசுக்கூட்டம் "உற்றதுயர் இவை நீங்க ஒழிப்பன்" என்று உணர்ந்து, "இவன் உயிர் பெற்று எழுந்தாலன்றி, இப்பசுக் கூட்டத்தின் துயர் நீங்காது" எனத் திருவுளங் கொண்டு, மூலனுடைய உடலில் தம் உயிரை அடைவிக்க அருள்புரியும் தவமுனிவர், தம்முடைய உடலேப் பாதுகாப்பாக ஓரிடத்தில் சேமித்து வைத்து, தாம் முயன்று தவம் செய்து பெற்ற சித்திகளினுலே இறந்து கிடக்கும் மூலனுடைய உடலில் தம் உயிரைப் பாய்த்தினுர். அக்கணமே இறந்து கிடந்த மூலன் உயிர் பெற்றுத் "திருமூலராய்" எழவும், இது காறும் கதறிக் கொண்டிருந்த பசுக்களெலாம், நாத்தழும்ப நக்கி, மோந்து, அணேந்து கனேப்பொடு நயந்து பெரும் மகிழ்ச்சியோடு வாலெடுத்துத் துள்ளிக் குதித்து, துயர் நீங்கி மீண்டும் மேயச் சென்றன.

பசுக்கூட்டமானது மகிழ்வுறக் கண்ட திருமூலர், அவைகள் மேயுமிடத்திற்குச் சென்று நன்ருக மேய்த்துக் காவல் புரிந்தார். மாலேநேரம் வரவும் பசுக்கள், கன்றுகளே நினேந்து பைய நடப்பனவாக, திருமூலரும் அவற்றின் பின் சென்று சாத்தனூரை அடைந்தார். அங்கே பசுக்கள் வீடுகள் தோறும் போகத் தாம் வெளியில் நின்ருர். மானமுடைய

வளாகிய மூலனின் மனைவி, "நம் கணவர் இன்று மிகக் காலம் தாழ்த்து வந்தார்" என எண்ணிப் பயம் கொண்டு, அவர் நிற்கும் நிலையைக்கண்டு தம் கணவனாகிய மூலனுடைய உடம்பில் புகுந்திருப்பவர் சிவயோகியர் என்பதை அறியாது அவருடைய உடம்பைத் தொடவும், திருமூலர் அதற்கு இசையாது விலகினார். மூலனைத் தவிரக் குழந்தைகளோ, வேறு உறவினர்களோ இல்லாத அவள், மயக்கமுற்று "என் செய்தீர்" எனத் தளர, திருமூலர் "உனக்கு என்னோடு எந்தவிதத் தொடர்பும் இல்லை" எனக் கூறி அங்குள்ள ஒரு பொது மடத்தினுள் சென்று புகுந்தார்.

இரவெலாம் கணவனோடு பேசிக் களித்து அணைந்து தூங்குகின்ற அவள், தன் கணவனின் போக்கில் மாறுதலைக் கண்டு அன்று இரவு முழுதும் தூக்கமின்றியிருந்து, மறுநாள், நல்லார் பலரிடம் சென்று நிகழ்ந்நவற்றைக் கூற, அவர்கள் திருமூலர் இருக்குமிடம் சென்று அவர் இருந்த நிலைகண்டு, தெளிந்து, மூலனின் மனைவியிடம் "இது பைத்தியமோ, வேறு சார்புடையதோ இல்லை. சித்த விகற்பங்களி லிருந்தும் நீங்கி, எல்லையற்ற பெருமையுடைய தெளிந்த சிவயோகத்தில் தம் கருத்தை வைத்துள்ள இப்பெருநிலை யாராலும் அளவிட்டுரைக்கும் தரமுடையதன்று; முற்றும் உணர்ந்த இவர், இனி முன்போல் உங்கள் சுற்ற இயல்போடு கூடார்" என உரைக்கக், அதைக் கேட்ட அவள் மையலுற, அருகிலுள்ளோர் அவளை எடுத்துக் கொண்டு அகன்றனர். சிவயோகத்தில் இருந்த திருமூலர் எழுந்து பசுக்கள் வந்த வழியே சென்று சேமித்து வைத்திருந்த தன் உடலைத் தேடிக்காணாது திகைப் புற்று, முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானத்தையுடைய சிந்தையினால் ஆராய்ந்து. "ஆதியிலே சிவபெருமான் தந்தருளிய ஆகமங்களின் பொருளை, திருமூலர் வாக்கினால் தமிழிலே ஒரு ஒப்பற்ற நூலாகச் செய்யும் பொருட்டு, அவ்வுடலை மறைப்பித்தருளினார்" என உணர்ந்து "எல்லாம் இறைவன் திருவருள்" எனத் திருவுளம் கொண்டார்,

சுற்றிலுள்ள ஆமேய்க்கும் இடைக்குலத்தவர் பின்தொடர, அவர்க்கு தம் தொடர்பின்மையை முற்றவே மொழிந்தருள அவர்கள் சாத்தனூர் மீண்டனர். பின் திருமூலர் திருவாவடுதுறையைச் சேர்ந்தார். திருக் கோயிலில் உட்சென்று அரும்பொருளாம் சிவபரம்பொருளை வணங்கி, மேற்புறத்தில் இருக்கும் அரசடியில் சிவயோகம் தலைநின்று பூவலரும் இதயத்துப் பொருளோடும் உணர்ந்திருந்தார், "ஊனுடம்பிற் பிறவி விடம் தீர்ந்து உலகத்தோர் உய்ய, ஞானம், யோகம், கிரியை, சரியை எனும் நான்கு மலர்களால், ஓராண்டுக்கு ஒன்றாக, 'ஒன்றவன் தானே' என எடுத்துத் தமிழ் மூவாயிரம் (திருமந்திரம்) சாத்தி, மூவாயிரம் ஆண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து," சென்னி மதி அணிந்தார் தம் திருவருளால் திருக்கயிலை தன்னில் அணைந்து, ஒரு காலும் பிரியாமைத் தாளடைந்தார். நலஞ்சிறந்த நான்கு நெறி மலர்ந்த மொழித் திருமூல தேவர் மலர்க்கழல் வணங்கி வாழ்வாம்.

பிரமாதீச ஆண்டு ஐப்பசித் திங்கள் 24-ஆம் நாள் (9-11-73) வெள்ளிக்கிழமையன்று திருமூலநாயனாரின் திருநட்சத்திரமான அசுவினி வருகிறது.

திருமாலடியார்

இராமாநுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.,

(3)

இராமாநுசரைப் பிரிந்த யாதவப்பிரகாசர் மற்ற சீடர் குழுவுடன் காசி மாநகரை அடைந்தார். அங்கு நாள்தோறும் சீடர்களுடன் கங்கையில் நீராடி விசுவநாதரை வணங்கிப் பூசித்து வரலானர். இங்ஙனம் கங்கை நதியில் நீராடி வரும் நாளில் சீடர்களில் ஒருவரான கோவிந்தபட்டர் என்கிற எம்பாருடைய கையில் ஒரு இலிங்கம் வந்து சேர்ந்தது. இந்த இலிங்கத்தை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு 'என்ன செய்வது?' என்று சிந்திக்கும் நேரத்தில் யாதவப்பிரகாசர் கோவிந்தரை நோக்கி 'நீர் தெய்வத் தன்மையை உடையவர்; ஆகையால் கங்கையில் நீராடிய பயன் உமக்குக் கைமேல் கிட்டிவிட்டது. கங்காதரனாகிய சிவபெருமானே உமது கைபுகுந்தான்' என்று பலவாறு புகழ்ந்து பாராட்டினர். மேலும் அவருக்கு 'உள்ளங்கை கொணர்ந்த நாயனர்' என்றும் பெயர் சூட்டினர். அன்று முதல் சீடர்களெல்லோரும் அப்பெயராலேயே அவரை அழைக்கலாயினர், கோவிந்தரும் தம்கையில் வந்து புகுந்த இலிங்கத்தை மிகவும் பக்தியுடன் பூசித்து வந்தார். யாதவப்பிரகாசருடைய அத்துவைத வேதாந்தக் கொள்கைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டார். இராமாநுசரைப் பற்றிய நினைப்பையும் விட்டு எப்பொழுதும் யாதவப்பிரகாசருடைய உபதேசங்களிலே மனத்தைப் பறிகொடுத்தார்.

யாதவப்பிரகசரும் கங்கை நீராடுதலை முடித்துக் கொண்டு மீண்டும் காஞ்சிபுரத்துக்குச் செல்லக் கருதினர். வழியில் சகந்நாதம், அகோபிலம் என்னும் ஊர்களின் வழியாகச் சென்று அங்குள்ள கடவுளர்களைத் தொழுது வணங்கி முடிவில் காளத்தியை அடைந்தார். அப்பொழுது உள்ளங்கைநாயனராகிய கோவிந்தர், யாதவப்பிரகாசரை நோக்கி 'குருவே நான் என் கையிலுள்ள இலிங்கத்தைத் தக்கதோரிடத்தில் தாபித்துவிட்டு வருகிறேன். விடை கொடுக்க வேண்டும்' என்று வேண்டினர். யாதவப்பிரகாசரும் 'இக்காளத்தி மிக்க புண்ணியத்தலம். இயற்கை எழில் வாய்ந்த இடம். இங்கே உம்முடைய விருப்பப்படி இலிங்கத்தை தாபிக்கலாம்' என்று அருளாசி வழங்கினர். உள்ளங்கை நாயனரும் பெருமகிழ்வெய்தித் திருக்காளத்தியின் நடுவிலே பாய்ந்தோடும் பொன்முகரி ஆற்றின் கரையிலே சோலைகள் சூழ்ந்த ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்குத் தம் கையிலுள்ள இலிங்கத்தைத் தாபித்து அங்கேயே சில காலம் தங்கிப் பூசித்து வரலானர். கோவிந்தருடைய வழிபாட்டில் மகிழ்வெய்திய காளத்திநாதனும் கோயிற் பரிசனங்களின் கனவிலே தோன்றி 'ஊருக்கு வெளியே நம்மைப் பூசித்து வரும் உள்ளங்கை நாயனரை நம் கோயிலுக்கு அழைத்து வாருங்கள்' என்று கட்டளை

யிட, அவர்களும் அவ்விதமே நாயனரிடம் வந்து காளத்திநாதனின் விருப்பத்தைக் கூறினர்கள். உடனே உள்ளங்கைநாயனராகிய கோவிந்தரும் கோயிலுக்குச் சென்று வழிபட்டு, அன்றுமுதல் அக்கோயி லின் ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். நாள்தோறும் நறுமணமுள்ள மலர்களைத் தம் கையினலேயே பறித்து மாலையாகக் கட்டி இறைவனுக்குச் சூட்டி மகிழ்ந்தார். அவ்வூரார‌னைவரும் அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள்.

யாதவப்பிரகாசரும் தம் மாணுக்கர்களுடன் மீண்டும் கச்சியம்பதிக்கு வந்து சேர்ந்தார். தமக்கு முன்னே இராமாநுசர் காஞ்சிபுரத்துக்கு வந்து நலமாக இருக்கின்ருர் என்ற செய்தியைச் செவியுற்று வியப் படைந்தார். இதுவும் இறைவன் திருவருள்தான் என்று தன் செயலுக்கு வருந்தினர். தன் சீடர்களைக் கூப்பிட்டு "இராமாநுசர் தப்பிப் பிழைத்துவிட்டார் என்பதனல் நீங்கள் இனிமேல் கவலைப்பட வேண்டாம்: மேலும் எப்படியாவது இராமாநுசரை நம்மிடம் அழைத்து வாருங்கள்" என்று பணித்தார். சீடர்களும் இராமாநுசரிடம் சென்று 'அன்பரே! எங்களைவிட்டு எப்படிப் போய்விட்டீர்? காட்டிலே இருட்டில் தவறிப் போய் விட்டீரே! காட்டு விலங்குகளால் என்ன தீமை நேர்ந்ததோ என்று ஒன்றும் தெரியாமல், எங்கும் தேடிக் காணுமையால் நாங்கள் மிக்க வருத்தத்தோடே புலம்பிக் கொண்டே காசிக்குப் போய் விட்டோம். எப்படியோ நீர் உயிர் தப்பிக் காஞ்சிபுரத்திற்கு வந்து விட்டீர். உம்மைக் கண்டதில் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி. குருவுக்கும் தாங்கள் இங்கு வந்திருப்பது தெரியும். அவரும் மகிழ்ச்சியோடு உம்மைக் காணக் காத்திருக்கிருர். உடனே வாருங்கள்' என்று வேண் டினர். இராமாநுசரும் நிகழ்ந்ததை மறந்து பழையபடியே தம் குருவாகிய யாதவப்பிரகாசரைக் காணவேண்டுமென்று பணிவோடு சென்று வணங்கினர்.

இராமாநுசரைக் கண்டதும் யாதவப்பிரகாசருக்குச் சற்று நடுக்கம் உண்டாயிற்று. எனினும் தம் அழைப்பை ஏற்று வந்திருப்பதால் இராமாநுசருக்கு நம்முடைய திட்டம் தெரியவில்லை போலும் என்று முடிவு செய்தார். மனமார வரவேற்பதுபோல் முகத்தை மலரவைத்துக் கொண்டு வரவேற்ருர். 'காட்டில் எங்குத் தேடியும் காணுமல் மிகவும் வருந்தியிருந்த நாம் உம்மைக் காணவும் பெற்ருேமே' என்று கூறினர்.

இராமாநுசரும் யாதவப்பிரகாசரை நோக்கி காட்டில் வழிதப்பிச் சென்ற நான் 'நமக்குத் துணையாவார் யார்? என்று திகைத்து நின்றேன். அப்போது அந்த வழியே வந்த வேடனும், அவனுடைய மனைவியும் எனக்குத் துணையாய் வழிகாட்டி உதவினர் என்று வரலாற்றைக் கூறினர். அதைக் கேட்ட யாதவப்பிரகாசர் இராமாநுசருக்கு இறை யருள் மிகுதியாக உள்ளது என்று தன் உள்ளத்தில் எண்ணி அவர்பால் அன்புடையவராகி, அவரைத் தம்முடன் அழைத்துச் சென்று வேதாந்த நூல்களைக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

இவ்விதமிருக்கையில் காஞ்சி மாநகரத்தில் சோழ ஆட்சிக்குட்பட்ட ஒரு சிற்றரசன் சில காலம் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு அழகி லும், அறிவிலும் சிறந்த ஒரு மகள் இருந்தாள். அவளை பிரம்மராக்கதன் என்னும் பேய் பிடித்திருந்தது. எந்த மந்திர தந்திரங்களுக்கும் அசையாதிருந்த அப்பேயை ஓட்ட வல்லவனை அரசன் தேடிக்

கொண்டிருந்தான். அப்போது அவனது அவைக்களப் பெரியோர்கள் யாதவப்பிரகாசரின் பெருமைகளைச் சொல்லி அம்மறையவரால் இப்பேயை ஓட்ட முடியும் என்று கூறினர்கள். அரசனும் அவரை அழைத்து வருமாறு பணியாளர்களுக்குக் கட்டளையிட்டான். ஏவலர் களும் யாதவப்பிரகாசரை யடைந்து அரச மகளின் பேயைப் போக்க வேண்டும் என்று அழைத்தனர். அதற்கு அந்த யாதவப்பிரகாசரும் நாம் அங்கு வரவேண்டியதில்லை. 'யாதவப்பிரகாசன் உன்னைப் போகச் சொன்னான்' என்று பேயிடம் என் பெயரைச் சொன்னமாத்திரத்திலே அது தானாகவே போய்விடும், கவலைப்படாதீர்கள் என்று கூறி அனுப்பி விட்டார். அவர்களும் அரண்மனையை அடைந்து பேய் பிடித்த அம் மகளிடம், 'பிரம்மராக்கதனே, உன்னை யாதவப்பிரகாசன் இம் மகளை விட்டுப் போகச் சொன்னான்' என்று கூறினர்கள். ஆனால் அப்பேயோ 'நான் யாதவப்பிரகாசனை இவ்வூரை விட்டுப் போகச் சொன்னேன்' என்று கூறுங்கள் என்று சொல்லிவிட்டு ஆடத் தொடங்கி விட்டது. இதனையறிந்த யாதவப்பிரகாசர் தம் மாணாக்கர்களுடன் அரசவைக்கு வந்து அம்மகளுக்கு எதிரில் நின்று கொண்டு மந்திரத்தை உருவேற்றி, கைவிரல்களை முடக்கி முட்டி பிடித்தார். உடனே அப்பேயும் 'யாதவப் பிரகாசா! நீ உச்சரிக்கும் மந்திரத்தை நான் அறியேனோ? உன்னையும் உன் முற்பிறப்பையும் யான் அறிவேன்' என்றது. உடனே யாதவப் பிரகாசரும் 'அப்படியாகில் நீ என் முற்பிறவியினைக் கூறுவாயாக' என்று கேட்க, அப்பேயும் "நீ, முற்பிறவியில் மதுராந்தகத்தின் ஏரிக்கரை யிலிருந்த ஒரு புற்றில் உடும்பாய் இருந்தாய் அப்போது திருவரங்கம் பெரிய கோயில் வைணவர்கள், திருமலை திருப்பதிக்குச் செல்லும் வழியில் அங்கு ஏரிக்கரையில் நீராடி, உணவருந்தினர்கள். அவர்கள் அமுது செய்தபோது சிந்திய உணவையும் நீரையும் நீ அருந்தினாய்; அதனால் இப்பிறப்பில் மிகவும் தத்துவ ஞானம் கைவரப்பெற்று பலகலைகளிலும் வல்லவனாய்த் திகழ்கின்றாய். இது இவ்விதமிருக்க, என் பிறப்பின் வரலாற்றையும் உனக்குச் சொல்லுகிறேன். யான் முற்பிறவியில் மறையோனாகப் பிறந்து வேள்வி செய்த பொழுது மந்திரக் குறைவும், செயல் குறைவும் ஏற்பட்டு அதன் பலனாகப் பிரம்மராக்கதனாக இப்படிப் பிறந்துள்ளேன். என்றாலும் உம்முடைய சீடர்களில் மிகவும் அறிவிற் சிறந்தவரான இராமானுசர் தம் திருவாக்கால் என்னைப் போகச் சொன்னால் இப்போதே நான் போவேன்' என்றது.

யாதவப்பிரகாசரும் இராமானுசரை வேண்ட, அவ்விராமானுசரும் பேயைப் பார்த்து 'இம்மகளைவிட்டு ஓடிப்போ' என்று சொல்ல, அதுவும் உடனே அம்மகளை விட்டு ஓடிவிட்டது. பேய் ஓடியதற்கு அடையாள மாக அருகிலிருந்த அரசமரத்தை முறித்துச் சென்றது. அரசனுடைய மகளும் அழகுக்கும் அறிவுக்கும் பொருந்த இராமானுசரைத் தொழுது வணங்கினாள். அரசனும் பெருமகிழ்வெய்தி வேண்டிய பொன்னையும் பொருளையும் இராமானுசருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். இராமானுசரோ அவைகளையெல்லாம் தம் குருவாகிய யாதவப் பிரகாசருக்கு அளித்து அடிபணிந்தார்.

இராமானுசர் எவ்வளவு பணிவுடன் வேதாந்த விழுப்பொருளின் தத்துவங்களை யாதவப்பிரகாசரிடம் கேட்டாலும் அப்பொருள்கள் அவருடைய மனத்தை மகிழ்விக்கவில்லை. மேலும் மேலும் ஐயப்பாடுகளே மிகுதியாகி வந்தன. ஆதலால் பேரருளாளராகிற வரதராசப் பெருமாளையும் பெருந்தேவியாகிய தாயாரையும் தம்முடைய மனக்கலக் கம் தீரவழி யாது என்று வினவினர். அன்றிரவு பேரருளாளர் இராமா

நுசருடைய கனவில் தோன்றி 'நம்மிடம் மிகவும் பக்தி கொண்டு தொண்டு புரியும் திருக்கச்சி நம்பியிடம் நீர் பொருள் கேட்டுப் பேறு பெறுக' என்று அருள்பாலித்தார். இராமாநுசரும் வைசியகுல திலக ரான திருக்கச்சிநம்பியின் திருமாளிகைக்கு எழுந்தருளி வேரற்ற மரம் போலே, அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். நம்பிகள் பக்தி யோடு தொண்டு நெறியையே பெரிதும் போற்றுபவர். இறை தத்துவங் களை வேத-உபநிடதங்களைக் கொண்டு விவாதிப்பதை விட, அவ்வெம் பெருமானுக்குப் பக்தியோடு-உள்ளன்போடு தொண்டு செய்வதே ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டிய பணியாகும் என்பதை இராமாநுசருக்கு உபதேசித்தார். அதற்கேற்ப நம்பிகள் வரதராசப் பெருமாளுக்கு எப்பொழுதும் திருவாலவட்டம் வீசித் தொண்டு செய்து வந்தார். அவர் காட்டிய வழியிலேயே இராமாநுசரும் பெருமாளுக்குத் திருமஞ்சனம், திருவமுது முதலியவைகளுக்குத்தானே, குடம் குடமாகத் தண்ணீர் கொணர்ந்து தொண்டு செய்தார். அவ்வப்பொழுது நம்பி களிடம் அரிய உபதேச வாசகங்களைக் கேட்டு உள்ளம் தெளிந்தார். நம்பிகளும் இராமாநுசரிடத்தில் பேரன்பு கொண்டு அவருடைய உளப் பாங்கை நன்கு அறிந்து நல்லுபதேசங்களைச் செய்து வரலானர்.

இங்கு இவ்வாறு இராமாநுசர் தொண்டில் ஈடுபட்டிருக்கும் பொழுது, திருவரங்கத்தில் ஆளவந்தார் மாபெரும் ஞானியாய்ச் சீடர்களுக்கு வைணவ சமயத்தின் தொன்மையையும் பெருமையையும், அன்புப் பெரு நெறியையும் விளக்கிக் கூறிவந்தார். அவர், தமக்குப்பின் இந்த அன்புப் பெருநெறியாகிய வைணவத்தை உலகெங்கும் பரப்புவதற்கு ஏற்ற ஒரு சீடரைத் தேடிக் கொண்டிருந்தார். திருஅரங்கம் பெரிய கோயிலுக்குச் சென்று "அரங்கனே எனக்கு வயதாகி வருகிறது. அன்பு நெறியையே சிறப்பாகக் கொண்ட இந்த வைணவம் தழைக்க, ஒரு பேரறிவாளரை நீ அளித்தருள வேண்டும்" என்று வேண்டினர். அரங்கனும் அவருடைய வேண்டுகோளைச் செவிமடுத்து, "உமக்குப் பின்னே உம்முடைய பெரியோர்களான நாதமுனிகள் போன்றவர் களாலே வளர்க்கப்பட்ட இந்த வைணவத்திரு செழிக்க, நாம் இராமாநுசரை அளிக்கின்றோம். அவரை நீர் உம்முடைய அருட் கண்ணாலும், அறிவுக் கண்ணாலும் ஆட்கொள்க" என்று அருச்சகர் வழியாகக் கூறினன்.

ஆளவந்தாரும் காஞ்சிபுரத்திலே இராமாநுசரென்னும் ஒரு பெரிய வேதாந்தசிங்கம் உலவிவருவதாகப் பலர் வாயிலாகக் கேள்விப் பட்டுள் ளார். அச்சிங்கவேற்றைக் காணவேண்டுமென்று பெரு விருப்புற்றார். திருக்கச்சிநம்பியின் அரவணைப்பிலே அச்சிங்கம் வளருவதையும் அறிந்து மகிழ்ந்தார். சிறிது சிந்தித்துத் தம் சீடர்களுள் ஒருவரான பெரிய நம்பியைக் கூப்பிட்டு "நீர் உடனே காஞ்சிபுரம் சென்று இராமாநுசரை எப்படியாவது நம்மிடம் அழைத்துவரவேண்டும்" என்று பணித்தார். ஆசானின் கட்டளையைத் தலைமேல் தாங்கிப் பெரிய நம்பி களும் பேரருளாளரான வரதராசப்பெருமாள் பெருந்தேவியோடு உறை யும் காஞ்சியம்பதிக்குப் புறப்பட்டார். திருவரங்கம் பெரிய கோயிலிலிருந்து கால் நடையாகவே நடந்து பெருமாள் கோவில் என வழங்கும் கச்சியம் பதியைச் சில நாட்களில் வந்தடைந்தார்.

(தொடரும்)

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

மறைஞானசம்பந்தர் வரலாறு (தொடர்ச்சி)

உமாபதியார்க்கு உபதேசம் :

தில்லை நகர்க்குப் புறத்தே அமைதியான சோலைக்கு இடையே உள்ள இப்பகுதியில் இவர் இருந்து தவம் பெருக்கிய இடத்தில், தில்லைக் கோயிற் கோபுர தரிசனம் செய்தபடி, தியான வேள்வி நிகழ்த்தி வந்தார். அருள்நலம் பெருக்கும் மாணுக்கர் கூட்டம் நாளும் இந்தப் பெரும் புலமை அருளாளரை நாடி வந்தது. தில்லைவாழ்அந்தணர் களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் என்ற நல்லோர்க்கு ஞான உபதேசம் புரிந்தார் இத்தூயோர். தம் ஞான முதல்வராகிய அருணந்தி சிவாசாரியாரிடம் பெற்ற கயிலாய பரம்பரை அருட் கருவூலத்தின் திறவு கோலை உமாபதியார்க்கு உரைத்தருளிய பிறகு இவருடைய உலகவாழ்வு நிறைவு பெற்றது.

சிவனடி சேர்தல் :

மறைஞான சம்பந்தர் இறையடி நீழல் அடைந்தமை ஆவணி உத்திரம் என்பது மரபு. வரலாற்ருசிரியர் இவ்வருட் பெருந்தகையார் திருவடிப் பேற்றைப் பின்வரும் பாட்டால் விளக்கியுள்ளனர். மாணுக்கர்க்கு ஞான உபதேசம் செய்தனரேயன்றித் தனிநூல் ஒன்றும் இவர் இயற்றவில்லை

"உத்தமப்பரி பாகராம் உமாபதி யார்க்குச்
சுத்ததத்துவ ஞானத்தைத் துகளற அருளிச்
சித்தர் சூழ்ந்துவாழ் திருக்களாஞ்சேரியி லமர்ந்து
முத்தி எய்தினுர் முழுமுதற் சிவனடி முன்னி"

5

உமாபதி சிவாசாரியார் வரலாறு

தோற்றம் :

சந்தான ஆசிரியப் பெருந்தகையருள் நான்காமவராக உள்ளவர் உமாபதி சிவாசாரியார் ஆவர். இவர் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று நம்பி ஆரூரரால் சிறப்பித்துக் கூறப்பெற்ற அருட்புகழ் வாய்ந்த தில்லை மூவாயிரவருள் ஒருவர் ஆவர். 'உமாபதி' யார் என்பது இவருடைய இயற்பெயர் என்று கொள்வது மரபு. வரலாற்ருசிரியரும்,

"சொன்னசிவாகமம் விளங்கத் திருவுடையயந்
தணர்மரபில் ஒருவர் தோன்றிப்
பன்னரிய அபிதானம் உமாபதியார்
எனஎவரும் பரவப் பெற்ருர்"

என்றுரைத்துள்ளனர். தில்லைநகரில் வாழ்ந்த இச்சிறப்புடைய அந்தணர் குலத்தில் இவர் தோன்றினர். இவருடைய பெற்றோர் பெயர்கள் இன்னவென விளங்கவில்லை.

"பட்ட கட்டையா? பகற்குருடா?"

பொன்னம்பலத்தில் ஆடும் புனிதனைப் போற்றும் திறம் இயல்பாகவே வாய்க்கப் பெற்றவர் ஆதலின் இவர்தம் வாழ்வில் பேரருள் விளங்கிற்று. சித்தாந்த சைவச் செந்நெறிக்குப் பெருவிளக்கம் இவ்வருட் பெருந்தகையாரால் கிடைக்க வேண்டும் என்பது திருவருட் குறிப்பாதலின், இவருடைய வாழ்வின்கண் பல அற்புத விளக்கங்களை நாம் காண்கின்றோம். வழக்கம்போல் நடராசப் பெருமானை வழிபாடு செய்து மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் உமாபதியார்; பகற்பொழுது அது; சிவிகையில் இவர்ந்து வந்து கொண்டிருந்தார் இச்செம்மலார். கைவிளக்கு ஏந்தி ஏவலர் முன்பு சென்ற வண்ணம் இருந்தனர். திருவீதியில் மூன்றும் சந்தானகுரவராகிய மறைஞானசம்பந்தர் இக்காட்சியைக் கண்டார்; உமாபதியார்க்கு உண்மை உபதேசம் புரியும் பக்குவநிலை வந்துற்றதை உணர்ந்த மறைஞானசம்பந்தர், உமாபதியார் செவிகளிற் பொருந்தும் வண்ணம் சில மொழிகளைச் செப்பியருளினர்;

பருவகாலத்தே பெய்த மழையால் வித்துக்கள் முளை விடுதல்போல், மெய்ஞ்ஞான நாட்டம் கொண்டிருந்த உமாபதியார் செவிகளில் மறைஞான சம்பந்தர் திருவாய் மலர்ந்த சொற்கள் வந்து வீழ்ந்தன; "பட்டகட்டையில் ஏறிப் பகற் குருடு போவதைப் பாருங்கள்" என்ற அச்சொற்கள் உமாபதியார் செவிகளில் பாய்ந்தன. உள்ளத்தே ஞான ஒளியைத் தூண்டிவிட்ட இச்சொற்களைத் திருவாய் மலர்ந்த மறைஞான சம்பந்தருடைய தோற்றம் உமாபதியார் கண்களில் விளைந்தது; உடன் சிவிகையினின்றும் இறங்கினர். தம்மை 'வலிய ஆட்கொள்ள வந்த ஞான வள்ளல் இவரே' என்ற உணர்வு மீதூரப் பெற்று, மறைஞான சம்பந்தரின் மலரடிகளில் வீழ்ந்து வணங்கினர். அனைவரும் வியந்து நின்றனர். தம் மாணுக்கராக உமாபதியை ஏற்கும் திருக்குறிப்புடன் மறைஞானசம்பந்தரும் இருந்தனர். எல்லாம் வல்ல இறைவன் திருவருள், இவ்வாறு மறைஞானசம்பந்தர் வழியே உமாபதியாருடைய உள்ளத்தில் தெளிவு பிறந்திடத் தகுதுணையாயிற்று.

"தாங்கள் கூறிய சொற்களின் பொருளை உரைத்தருள வேண்டும்" என்று கூறிப் பணிந்தார் உமாபதியார். மறைஞானசம்பந்தரிடம் உண்மை உபதேசம் ஏற்றார். பல்லக்கைப் 'பட்டகட்டை' என்றும் கைவிளக்கு முதலிய பரிவாரத்தால் விளைந்த ஆடம்பரத்தைப் 'பகற் குருடு' என்றும் மறைஞானசம்பந்தர் வெளிப்படையாகப் பொருள் கொள்ளுமாறு கூறினரேனும், 'பசை இல்லாத இவ்வுலகத்தினையே அவர் 'பட்டகட்டை' எனக் குறித்தார் என்பதும், வேதம் ஆகமம் முதலிய கலையறிவுகள் எல்லாம் நிரம்பப் பெற்றும் ஞானம் பெறுதவர் என்பதனையே 'பகற்குருடு' எனக் குறித்தார் என்பதும் உமாபதியார் கொண்ட ஆழ்பொருள்களாயிருத்தல் வேண்டும். அவருடைய அகவழிகளைத் திறந்து 'மெய்ஞ்ஞானம் பெறவேண்டும்' என்ற தாகத்தை உண்டாக்கக் குருநாதருடைய இந்த மொழிகள் துணைபுரிந்தன என்று கூறலாம்.

ஞான மலர்ச்சி :

இயல்பாகவே உள்ளம் தெளிந்து ஞானநாட்டம் ஏற்பட்டிருந்த வேளையில், தம் குருநாதருடைய மொழிகள் உமாபதியார் உள்ளத்தில் பெரிய மாற்றத்தை ஆக்கிவிட்டன. 'தம்முடைய பகட்டான வாழ்வும் பிறவும் அகவாழ்விற்கு அணுவளவும் துணைபுரியமாட்டா' என்ற அடிப்படை உண்மையைச் சிலசொற்களிலே மறைஞான சம்பந்தர் விளக்கி விட்ட பாங்கினை உணர்ந்து தெளிந்தார் இவ்வருளாளர். 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற மொழி, பட்டினத்தாரை உருவாக்கிய வரலாறு இங்கே நினைவு கூரத் தக்கது. 'சும்மா இரு சொல்லற' என்ற மொழியின் மாபொருளை அறியமுயன்ற அருணகிரி யாரின் அநுபூதிவாக்கும் இங்கே உணர்ந்து ஒப்புநோக்கத் தக்கது.

பரிகலசேடம் உண்டது :

உமாபதியார்க்கு ஞான உபதேசம் புரிந்த மறைஞானசம்பந்தர், அவருடைய பக்குவ நிலையை மீண்டும் அறிவதற்காகவும், உலகம் அவருடைய உயர்நிலையை உணர்வதற்காகவும் ஒரு நிகழ்ச்சியை நிகழ்த் திடத் திருவுள்ளம் கொண்டார். தில்லையில் ஆடை நெய்வோர் வாழும் திருவீதிக்குச் சென்றார்; உமாபதியாரும் தம் ஆசிரியர் பின்னேயே பரிவுடன் நடந்தார். அத்தெருவில், ஆடை நெய்வோர் நூலின் பாவில் கஞ்சியேற்றும் பொழுது வழிந்தொழுகும் கூழை மறைஞானசம்பந்தர் தம் திருக்கைகளில் ஏற்று உண்டார். அப்பெருந்தகையார் அவ்வாறு ஏற்று உண்ணும்போது, அவரது திருக்கைகளின்று கூழ் ஒழுகிற்று, உமாபதியார் அதனைத் தம் கைகளில் ஏற்று, ஆசிரியருடைய 'பரிகல சேடமாகக்' கருதி மலர்ந்து உண்டார். ஆசிரியர் தம் மாணுக்கருடைய மனப் பண்பாட்டினை உணர்ந்து மகிழ்ந்தார். குலம், சாதி, முதலிய உலகியற் புன்மைகளுக்கு அப்பாற்பட்ட அன்பின் திறத்தைத் தம் மாணுக்கர் உடையவர் என்ற நிலையினைத் தம் திருவுள்ளத்தில் தேர்ந்தார்.

'சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை" என்று மணிவாசகர், சாதியின் புன்மைச் சுழிக்கொடுமையை உணர்த்தியுள்ளமை அறிவுலகம் அறிந்ததே ஆகும். உமாபதியார் தம் நல்லாசாரியர் பரிகலச் சேடத்தை உண்டின்புற்றமை, மாணுக்கர்க்குப் பெருநெறி விளக்கிக் காட்டுவதாகும். பிற்காலத்தே, குமரகுருபர அடிகள் தம் நல்லாசிரியராகிய தருமையாதீன நான்காம் குருமூர்த்திகள்-மாசிலாமணி தேசிக சுவாமிகள் மீது பாடிய "பண்டார மும்மணிக் கோவை" என்னும் தோத்திர நூலில், தம் ஞானசிரியருடைய பரிகல சேடம் உண்ணும் பொருட்டு விழைவதும், தம் ஆசிரியர் அடித் தொண்டர்களின் பரிகலம் உண்ணும் வரம் படைத்த நாயாகித் தாம் பிறக்க வேண்டும் என்று வேண்டுவதும் இங்கு நினைக்கத் தக்கன,

"திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக்கடல் வழக்கும்
வானுடை ஞமலி யாகிநின்
அருளையும் அயரா தவதரிப்பதுவே"

எனவரும் சீரிய கவிதைப்பகுதி இந்நிலையில் ஒப்புநோக்கி இன்புறத் தக்கதாகும்.

அருணந்தி சிவாசாரியரிடம் தாம் பெற்ற உபதேசத்தினை உமாபதியார்க்கு உரைத்தருளினர் மறைஞானசம்பந்தர். சாத்திர நூல்கள் பலவற்றையும் உணர்த்தினர், உமாபதியார். இங்ஙனம் பேரருட் செல்வம் பெற்று ஞானஞாயிருக விளக்கி வரலானர்.

கொற்றவன் குடிவாழ்வு ;

'அந்தணர்க்குரிய குல ஒழுக்கத்தினை உமாபதியார் தப்பினர்' என்று தில்லைவாழ் அந்தணர்கள் தவருக உணர்ந்தனர். அவரைத் தம்மரபினின்றும் விலக்கிவிட்டனர். ஆனந்தமா நடராசப் பெருமானைத் தீண்டி வழிபடும் பேற்றினை இவ்வாறு பிரிந்த உமாபதியார் தில்லைக்கு அருகில், சோழமன்னன் கொடுத்த ஒரு சிற்றூரில் திருமடம் ஒன்றில் தங்கித் தவம் பெருக்கி வரலாயினர். அங்குச் சிவபூசையும், நிட்டையும் புரிந்து, பக்குவமுள்ள மாணுக்கர்கட்குச் சிவஞான நூல்களை உபதேசித்து வீற்றிருந்து வரலாயினர். கொற்றவன் (அரசன்) வழங்கிய ஊர் ஆதலின் அந்தச் சிற்றூர் 'கொற்றவன்குடி' என்றும், அங்கேயே வாழ்ந்து வந்த காரணத்தால், உமாபதியார் 'கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்' என்றும் வழங்கப் பெற்றமை இங்குக் கருதத் தக்கது. இந்நாட்களில், உமாபதியார் திருவருட் தொண்டின் பெருமையை உலகம் உணர்ந்து கொள்ளுவதற்கேற்ற சில நிகழ்ச்சிகள் கூத்தரசன் திருவிளையாடல்களாக நிகழ்ந்தன.

தில்லைப் பெருமான் திருவிளையாடல்

மூவாயிரம் அந்தணர்களில் ஒருவர் ஒவ்வொரு நாளும் நடராசப் பெருமானுக்குப் பூசனை செய்தல் மரபு. இம்மரபின்படி உமாபதியார்க்கு உரியநாளும் வந்தது. உமாபதியாரும் உள்ளக் களிப்புடன், பெருமானை வழிபட்டு இன்புறும் பேரார்வத்துடன், பொன்னம்பலத்துப் புகுந்தார். மற்ற அந்தணர்களோ, குல ஒழுக்கம் தவறியவர் பூசனை புரியலாகாது என்று தடுத்து விட்டனர். அளவிறந்த மெய்யுணர்வும், ஆரா அன்பும் படைத்த உமாபதியார்க்கு விளைந்த உளத்துன்பம் உரையுள் அடங்குவதன்று. தாம் வழிவழியாக இயற்றிவரும் பென்னம்பலக் கூத்தன் புனித வழிபாடு தவறிவிட்டதே என்று எண்ணி வருந்தினர். ஆனல், இறைவன் அருள் இவ்வாறு ஆயின் மறுத்திடவோ, மறுகிடவோ நான் யார்?" என்று மனந்தேறிக் கொற்றவன் குடிக்கு மீண்டனர்; மனத்தாலேயே அன்று வழிபாட்டை இயற்றி முடித்தார். வழக்கம்போல் திருக்கோயிலில் மற்றைய அந்தணர் பூசனைக்குச் சென்ருர்; திடுக்கிட்டார்; பூசைப் பெட்டகத்துடன் பெருமானைக் காணவில்லை; அந்தணர்கள் இச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் அச்சமும் ஒருங்கு எய்தினர்கள். 'யார் செய்த குற்றமோ' இது என்று நடுங்கினர்கள். "பெருமானே! எல்லையில்லாக் காலந்தொட்டு இங்கு வீற்றிருக்கும் நீ, யார்க்கு அருள் புரியும் பொருட்டு, யாண்டுச் சென்ருய்? உன் திருவடியே புணையாகக் கொண்டு மாயைக் கடல் கடந்த தக்கவர்பால் நீ சென்ருயோ? யோக நெறி நிற்போர் மருங்குப் படர்ந்தாயோ? கிரியை முதலிய நெறி நிற்போர் மாட்டுப் புகுந்தாயோ? எங்குச் சென்ருய்?" என்று அழுது உளம் கனிந்து உருகினர்கள் தில்லை மூவாயிரவர் ஆகிய திருக்கூட்டத்தார். இவர்களது உருக்கத்தினை வரலாற்ருசிரியர் இவ்வாறு உரைத்துள்ளார்

(தொடரும்)

பேரவை மாநில மாநாடு



இந்து இளைஞர் மன்ற
மாநிலப் பொதுக்குழுக்
கூட்டம்



பேரவை இணைப்புச் சங்கப் பேராளர் மாநாடு